# உதயன்

சுடர் : 36 | கதிர் : 263 | புதன்கிழமை | ஆவணி 2ஆம் நாள் 18 ஒகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 | விலை: 30


# நாட்டை முடக்குவதால் எவ்விதப் பயனுமில்லை

## சுகாதார அமைச்சரின் நிலைப்பாடு இது



கொழும்பு, ஓகஸ்ட் 18

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப் படுத்துவதற்கான ஒரேவழி அனைவருக்கும் தடுப் பூசி வழங்குவதாகும். நாட்டை முற்றாக முடக்குவதால் பயன் எதுவுமில்லை. இவ்வாறு புதிய சுகாதார அமைச் சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். 18

## கொரோனா 3,555

கொழும்பு, ஓக. 18

இலங்கையில் நாளாந்தக் கொரோனாத் தொற்றாளர் களின்எண்ணிக்கைநேற்று 3 ஆயிரத்து 555 ஆகப் பதிவானது என்று அரச 18

## கொவிட் பலி 171

கொழும்பு, ஓக. 18

இலங்கையில் மேலும் 171 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றுமுன்தி னம் சாவடைந்துள்ளனர் என்று அரச தக வல் திணைக் 18

## ஒரேயொரு நோயாளியால் முடங்கியது நியூசிலாந்து

வெலிங்டன், ஓக. 18

ஒரேயொரு கொவிட் நோயாளியால் ஒட்டு மொத்த நியூசிலாந்தும் முடக்கப் பட்டுள்ளது. அந்த நாட்டின் பிர 18

## உண்மையைச் சொன்னதால் பவித்ராவின் பதவி 'அபேஸ்'

### ஜே.வி.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 18

நாட்டின் சுகாதார நிலைமைகளின் உண்மைகளைக் கூற முயற்சித்தமை யாலேயே சுகாதார அமைச்சு பவித்ரா வன்னியாராச்சியிடமிருந்து பறிக்கப் பட்டது. ஆசிரியர்கள் 'நாசமாய் போன வர்கள்' எனத் திட்டிய தால் கெஹலிய ரம் 18

## யாழ்ப்பாணத்தில் கொரோனாவால் மேலும் மூவர் நேற்றுச் சாவு!

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ்ப்பாணத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை மேலும் மூவர் கொரோனாத் தொற் றால் உயிரிழந் துள்ளனர். 18

## தடுப்பூசியால் மட்டும் கொவிட் அடங்காது!

### திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 18

'தடுப்பூசிகளின் மூலம் மாத்திரம் நாட்டில் கொரோ னாத் தொற்றுப்பரவலைக் கட்டுப் படுத்திவிட முடியாது. மக்கள் சுகா 18

## ஆணொருவரின் சடலம் பருத்தித்துறையில் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 18

பருத்தித்துறை சுப்பர்மடத்தில் ஆணொருவர் சடலமாக மீட் கப்பட்டுள்ளார். பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப் படையில் நேற்று அதிகாலை சடலம் மீட்கப்பட் டது என்று பருத் 18

## தேவையற்று நடமாடாதீர்!

### இராணுவத் தளபதி கோரிக்கை

கொழும்பு, ஓக. 18

இலங்கையில் கொரோனா வைரஸ் பெருந் தொற்றானது தீவி 18

## மயங்கி வீழ்ந்து ஒருவர் மரணம்

### வவுனியாவில் சம்பவம் பி.சி.ஆர். முன்னெடுப்பு

வவுனியா, ஓக. 18

வவுனியா ஓமந்தைப் பகுதியில் பணியில் ஈடுபட்டிருந்த நபரொரு 18

## இலங்கையில் மேலும் 3 கொவிட் திரிபுகள்!

கொழும்பு, ஓக. 18

நாட்டில் தற்போது வேகமாக பரவிவரும் 'டெல்டா' திரிபின் மேலும் சில திரிபுகள் இலங்கையில் 18

## வர்த்தக நிலையத்தில் ஒன்றுகூட வேண்டாம்!

### யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரன் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ். மாவட்ட வர்த்தக நிலை யங்களில் அதிக ளவில் மக்கள் 18

## வல்வெட்டியில் பயங்கரம் குடும்பத் தலைவர் குத்திப் படுகொலை

யாழ்ப்பாணம், ஓக. 18

குடும்பத்தகராறு காரணமாக இளம் குடும் பத்தலைவர் கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அவர் இரண்டு பிள்ளைகளின் 18

## பொன்னாலையில் மக்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல்!

### பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 18

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பொன்னாலைப் பகுதியில் நுழைந்த இராணுவத்தினர் மக்கள் மீதுதாக்குதல்மேற்கொண்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. கடந்த ஞாயிறுக்கி ழமை இரவு இந்தத் 17


SLT-MOBITEL MOBILE
PREPAID
மற்றும்
POSTPAID
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்,
Non-Stop லொக்கா
இதயம் போதும் எனும் வரை SCROLL செய்யுங்கள்
விரல்கள் போதும் எனும் வரை CHAT செய்யுங்கள்
கண்கள் போதும் எனும் வரை VIDEO பாருங்கள்
நீங்கள் விரும்பும் 9 App இற்கும் வேண்டியளவு data மற்றும் மேலதிகமாக 2GB.
398 ரூபா இற்கு #170# அழைத்து அல்லது SELFCARE APP ஊடாக இப்போதே அக்டிவ் செய்யுங்கள்.
www.sltmobitel.lk
SLTMOBITEL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகட்சிக் கூட்டத்தை உடனேயே கூட்டுங்கள்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி கோரிக்கை



கொழும்பு. ஓக. 18

கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்தும் பொறிமுறை தொடர்பிலும் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராய்வதற்காக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் கூட்டத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உடன் கூட்ட வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

உலக நாடுகள் இதற்கு முன்னர் இவ்வாறானதொரு தொற்று நிலைமையை எதிர்கொள்ளவில்லை. இதனால்தான் இன்று அனைத்து நாடுகளிலும் சுகாதாரத்துறைசார் வளப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்நிலையில் இருந்து மீள்வது குறித்து சிந்திக்க வேண்டும்.

நாட்டில் இன்று தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மருத்துவமனைகள் நிரம்பிவழிகின்றன. தொற்றாளர்களுக்கு வீடுகளிலேயே சிகிச்சையளிக்கும் நடைமுறையும் ஆரம்பமாகியுள்ளது. எனினும், வீடுகளில் இருக்கும் தொற்றாளர்கள் தொடர்பில் சுகாதார அமைச்சு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதற்கான வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டும். இதற்கு எதிரணியும் ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

அதேவேளை, மக்களுக்கு இன்று உயிர் தொடர்பான உச்சம் ஏற்பட்டுள்ளது. அந்தப் பீதியை போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனெனில் மக்கள் உளரீதியில் பாதிக்கப்பட்டால் நோய் எதிர்ப்புச் சக்தி குறையும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, மக்கள் மத்தியில் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட வேண்டும். அதற்காக உலக சுகாதார நிறுவனத்திடம் மேலதிக உதவிகளை பெறலாம்.

தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கோரிக்கையொன்றை முன்வைக்கின்றேன்.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் பிரதிநிதிகளின் கூட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல சுகாதாரத் துறையினரை மேலும் பலப்படுத்த வேண்டும். அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். அதற்கான நம்பிக்கையை வழங்க வேண்டும்.

தற்போதைய பிரச்சினை தேசியப் பிரச்சினையாகும். அதிலிருந்து நாட்டை மீட்பதற்கு, நாட்டு மக்களை பாதுகாப்பதற்கு நாம் அனைவரும், அரசியல் பேதங்களை மறந்து ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்- என்றார். (ஒ,44)



ஏற்றுமதி மூலம் உலகை வெல்ல
நீங்களும் எம்மோடு இணையுங்கள்

BOC export circle

உங்களுடைய வணிகம் எந்தளவினதாக இருந்தாலும், உங்கள் தயாரிப்புகளை வெளிநாடுகளுக்கு அனுப்பும் எதிர்பார்ப்போடு இருப்பீர்களானால் இப்பொழுதே எம்மோடு தொடர்பு கொண்டு BOC Export Circle ஊடாக ஏற்றுமதித்துறை தொழில்முனைவாளராக வேண்டும் என்ற உங்கள் கனவை நனவாக்கிக் கொள்ளுங்கள்.

- உலகளாவிய சந்தை வாய்ப்புக்கள்
- வர்த்தக பதிவுகள் தொடர்பான வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள்
- குறைந்தபட்ச ஆவணங்களுடனான நட்புறவுச் சேவை
- நம்பகமானதும் செயற்திறன் மிக்கதுமான வங்கிச் சேவைகள்

*The world awaits you*

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
011 2 203 304

1975 BOC CALL CENTRE
www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு கோத்தாபய சாதகமான பதில்!

கொழும்பு, ஓக.18

அனைத்துக் கட்சி கூட்டத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க அழைப்புக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சாதகமாக பதிலளித்துள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரபூர்வ அறிக்கை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க, தற்போதைய கொரோனா நிலைமை குறித்து கலந்துரையாடினார். இப்போது அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்ட வேண்டும் என்று ரணில் கோரிக்கை விடுத்தார்.

அதில் வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான பரிந்துரைகளை அரசியல் தலைவர்கள் முன்வைக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐ.தே.க. ஏற்கனவே தங்கள் சொந்த முன்மொழிவுகளை முன்வைத் துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி இந்த கோரிக்கைக்கு சாதகமாக இருந்தார் என்றும் - ஆனால், அனைத்து கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்படுமா என்பதை உறுதிப்படுத்தவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் அறிக்கை தெரிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரப் பணியாளர்களுக்கு மூன்றாவது டோஸ் வழங்குங்கள்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

**கொழும்பு, ஓக. 18**

**அதிகளவான சுகாதாரப் பணியாளர்கள் தற்போது தொற்றுக்குள்ளாகி வருகின்றார்கள். எதிர்காலத்தில் சுகாதாரத்துறை முடங்கும் நிலைமை ஏற்படலாம். எனவே சுகாதாரப் பணியாளர்களுக்கு முதல் கட்டமாக மூன்றாவது டோஸை ஏற்றவேண்டும் என்று - அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கையை முன்வைத்துள்ளது.**



அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடக சந்திப்பில், அந்தச் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரும், ஊடகக்குழு உறுப்பினருமான மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாத் தொற்று நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றது. உயிரிழப்புக்களை கட்டுப்படுத்த வேண்டும். 150க்கு மேற்பட்ட சாவுகள் தினமும் இடம்பெறுகின்றன. தற்போதுள்ள வைரஸ் திரிபால் நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிச் செல்கின்றது. தடுப்பூசியால் மாத்திரம் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நோயின் முகாமைத்துவம் பற்றி பலர் இப்போது பேச முற்படுகின்றனர். குறிப்பாக அரசியல்வாதிகள் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கின்றனர். நோய்த் தொற்றை எப்படி முகாமைத்துவம் செய்வது என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பை சுகாதாரத்துறையினிடம் விட்டு விடுங்கள்.

அரசியல்வாதிகள் ஒருவரைக் ஒருவர் குற்றஞ்சுமத்துவதை விடுத்து நோயின் முகாமைத்துவத்தை வினைத்திறனாகக் கொண்டு செல்வதற்கு ஒத்துழைக்கவேண்டும். சுகாதாரப் பிரிவினருக்கு ஒத்துழைக்க வேண்டும். பொதுமக்கள் கட்டுப்பாடுகளைப் பின்பற்றி சுகாதாரத்துறையினருக்கு ஒத்துழைக்கவேண்டும்.

30 தொடக்கம் 40 வரையான சுகாதார ஊழியர்கள் நாளாந்தம் தொற்றால் பாதிக்கப்படுகின்றனர். இதனால் சுகாதாரக் கொள்ளளவும் தீர்ந்துபோகக் கூடிய ஆபத்துக்கள் காணப்படுகின்றது. சுகாதார ஊழியர்களைப் பாதுகாப்பதற்காக பொதுமக்களும் ஒத்துழைக்கவேண்டும்.

மேலும் சுகாதாரப் பணியாளர்கள் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றவர்கள் இருப்பினும் அவர்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்கு மூன்றாவது டோஸையும் ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். பல்வேறு நாடுகள் இதனைக் கடைப்பிடித்துள்ளன. அதன் பின்னர் நாட்டு மக்களுக்கு படிப்படியாக இதனை வழங்கவேண்டும் - என்றார். (ஒ.5)

# பொருளாதாரத்தைவிட மக்களின் உயிர்தான் இப்போது முக்கியம்

## சபையில் எதிர்க்கட்சி அழுத்தி உரைப்பு

கொழும்பு, ஓக. 18

பொருளாதாரத்தைவிடவும் மக்களின் உயிரே முக்கியம் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அதேபோல நாட்டை முடக்குமாறு அனைத்து மருத்துவ சங்கங்களும் வலியுறுத்தியுள்ளன. இந்நிலையில் நாட்டை முடக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்காதது ஏன்? தற்போதைய சூழ்நிலையில் இந்தியாவைவிடவும் இலங்கையின் உயிரிழப்பு விகிதம் உச்சம் தொட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கொவிட்19 (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டவரைவு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்ததாவது:

உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வு நிறுவனங்களால் வெளியிடப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஒரு மில்லியன் பேரில் உயிரிழப்பவர்களின் விகிதத்தை எடுத்துக்கொண்டால் இலங்கை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. நாளாந்தம் உயிரிழப்பவர்களின் பட்டியலில் 2ஆவது இடத்திலும், வாராந்தம் உயிரிழப்பவர்களின் பட்டியலில் 4ஆவது இடத்திலும் உள்ளது.

அத்துடன், இலங்கையில் நாளாந்தம் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை 5.72 வீதமாக உள்ளது என ஜோன் ஹெப்கின் பல்கலைக்கழகம் தெரிவிக்கின்றது. இந்தியாவின் உயிரிழப்பு விகிதம் 0.35 ஆகும். அந்தவகையில் இந்தியாவைவிடவும் இலங்கையில் உயிரிழப்பு விகிதம் தற்போதைய சூழ்நிலையில் உச்சம் தொட்டுள்ளது.

நிலைமை இவ்வாறிருக்கையில் இலங்கையில் மாற்றப்பட்ட போலியான தரவுகளே வெளியிடப்படுகின்றன. கம்பஹா மாவட்டத்தில் அண்மையில் வெளியிடப்பட்ட தரவுகள்மூலம் இது உறுதியானது. தரவுகளை இராணுவ அதிகாரி ஒருவரே மாற்றுவதாக அரச தரப்பினரே குற்றஞ் சாட்டியுள்ளனர்.



மருத்துவர்கள் உட்பட சுகாதார தரப்பினரை பரிந்துரைத்தால் நாட்டை முடக்குவதற்கு தயார் என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன கருத்து வெளியிடுகின்றார். நாட்டிலுள்ள அனைத்து மருத்துவ சங்கங்களும், சுகாதார நிறுவனங்களும் மேற்படி பரிந்துரையை முன்வைத்துள்ளன. அப்படியாயின் ஏன் நாட்டை முடக்க முடியாது? நிலைமை பாரதூரம் என்பதையும் அந்த இராஜாங்க அமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

பொருளாதாரத்துக்காக மக்களை சாவு கொடுக்க முடியாது என பொருளாதார நிபுணர்களே கருத்து வெளியிடுகின்றனர். மக்களை கொன்றுகுவித்து விட்டு பொருளாதாரத்தை பாதுகாத்து என்ன பயன்? எனவே, அரசு அவசர முடிவுகளை எடுக்க வேண்டும் - என்றார். (ஒ.44)




## கிளிநொச்சி மாவட்டத்தில்

# 16 நாள்களில் 1,246 தொற்றாளர்கள்

## பிராந்திய தொற்று நோயியலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஓக.18

கிளிநொச்சி மாவட்டதில் இந்த மாத்தின் நேற்றுமுன்தினம் 16 ஆம் திகதி வரை ஆயிரத்து 246 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பிராந்திய தொற்று நோயியலாளர் மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாவது கோரோனா நோயாளி கடந்த வருடம் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி அடையாளம் காணப்பட்ட நாள் தொடக்கம் கடந்த மாதம் 31 திகதி வரை அயிரத்து 400 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

ஆனால், கடந்த 16 நாள்களில் ஆயிரத்து 246 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

நாட்டில் தீவிரமாகப் பரவிவரும் கொரோனா தற்போது கிளிநொச்சி மாவட்டத்திலும் பரவத் தொடங்கியுள்ளது என்பதை இது காட்டுகின்றது. ஒரு லட்சத்து 46 ஆயிரம் சனத்தொகையைக் கொண்ட கிளிநொச்சி மாவட்டத்தில் நாளாந்தம் 100க்கு மேல் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

அதிலும் பரிசோதனைக்கு செல்கின்றவர்களிலேயே இந்த எண்ணிக்கையான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுவருகின்றனர். இதுவொரு ஆபத்தான நிலைமை. ஆனால் பொது மக்கள் இந்த ஆபத்தான நிலைமையை உணர்ந்துகொண்டு செயற்பட வேண்டும் - என்றார்.(ஐ-214)



# கிளிநொச்சி சேவைச்சந்தை கொவிட் தொற்றால் மூடல்!

கிளிநொச்சி, ஓக. 18

கிளிநொச்சியில் கொரோனாப் பரவல் தீவிரம் பெற்றுள்ள நிலையில் கிளிநொச்சி சேவைச் சந்தையை தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த நடவடிக்கை இன்று முதல் நடைமுறைக்கு வரும் என்றும் பொருத்தமான பொ இடங்களில் வியாபார நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்றும் கரைச்சி பிரதேச சபை அறிவித்துள்ளது.

வியாபாரிகளும் மக்களும் சுகாதார நடைமுறைகைகளை உரிய வகையில் பின்பற்றி நடந்துகொள்ளுமாறும் பிரதேச சபை அறிவுறுத்தியுள்ளது. (ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்தியசுதந்திரதினத்தை முன்னிட்டு
## கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், ஓக.18
இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பிடித்த வெற்றியாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

**யாழ்ப்பாணம்**
முதலாம் இடத்தை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மாணவி அனோஜிக்கா சிவகுமார், இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணம் வசாவிளான் மத்திய கல்லூரி மாணவி கம்சிகா கஜேந்திரன், மூன்றாம் இடத்தை யாழ்ப்பாணம் யூனியன் கல்லூரி மாணவி சுவஸ்திகா சர்வேஸ்வரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

**கிளிநொச்சி**
முதலாம் இடத்தை கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலய மாணவி குமார் கிருஷாந்தி, இரண்டாம் இடத்தை கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவி சுப்பிரமணியம் பபிதா,
மூன்றாம் இடத்தை கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலய மாணவி மாணவி சுதாகரன் சுவேதிகா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

**முல்லைத்தீவு**
முதலாம் இடத்தை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவி சுப்பிரமணியம் சுடர்செல்வி, இரண்டாம் இடத்தை முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலய மாணவி மயில்வாசன் தினேகா, மூன்றாம் இடத்தை முல்லைத்தீவு உடையார்கட்டு மகா வித்தியாலய மாணவி சசிகுமார் ஷர்மிகா ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

**மன்னார்**
முதலாம் இடத்தை மன்னார் முருங்கன் மகா வித்தியாலய மாணவி றசிக்குமார் சசிகலா, இரண்டாம் இடத்தை மன்னார் முருங்கன் மகா வித்தியால மாணவி டியோன்மேரி யுஜிதா,மூன்றாம் இடத்தை மன்னார் முருங்கன் மகா வித்தியால மாணவி சுதாகரன் சுதர்ஷிகா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

**வவுனியா**
முதலாம் இடத்தை வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி மோகனப்பிரதா கோணேஷ்வரன், இரண்டாம் இடத்தை வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலய மாணவி குமுதினி பாலையா,மூன்றாம் இடத்தை வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய மாணவி ஞா.ரஜீந்தினி ஆகியோர் பெற்றுக்கொண்டனர். (ஐ-60)

# களைகளை கட்டுப்படுத்தாவிடின் நெல் உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி

### பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் எச்சரிக்கை

**கிளிநொச்சி, ஓக.18**
**களை நெல்லை (பன்றி நெல் ) விவசாயிகள் ஒன்றிணைந்து கட்டுப்படுத்த தவறின் மாவட்டத்தில் நெல் உற்பத்தியில் பெரியளவு வீழ்ச்சி ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது என்று -கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொன்னையா அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பொன்று கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெற் செய்கை 71 ஆயிரத்து 24 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது .
காலபோக செய்கையில் குறித்த களைகளின் தாக்கம் அதிகரித்து வருகிறது. மாவட்டத்தின் முரசுமோட்டை, உருத்திரபுரம், கணேசபுரம் மற்றும் பூநகரி போன்ற பகுதிகளில் அதிகளவு பரவி வருகிறது.
குறித்த களைகளை ஆரம்பத்திலே விவசாயிகள் கட்டுப்படுத்த, வயலில் நீர் உள்ள போதும், விதைப்பதற்கு முன்பு விதை களை சுத்திகரித்து, நீர்ப்பாசன வாய்க்கால்களை சுத்தம் செய்து நெல்லை விதைப்பதன் மூலம் ஓரளவு கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும். ஆரம்பத்திலே குறித்த களைகளை விவசாயிகள் இனம் கண்டு கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் தண்டு சிவப்பு நிறமாகவும் நெல்லை விட வேகமாக வளரக்கூடியது.
இனிவரும் காலங்களில் களை நாசினி பயன்பாடு இல்லாது போனால் மேலும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே விவசாயிகள் ஒன்றிணைந்து ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்த வேண்டும் -என்றார். (ஐ-214-113)

## தென்மராட்சி பிரதேச செயலக அலுவலருக்கு கொரோனா

சாவகச்சேரி, ஓக.18

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அலுவலகர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.
பிரதேச செயலக தாபனக்கிளையில் கடமையாற்றும் வடமராட்சியைச் சேர்ந்த பெண் அலுவலருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து கிளையின் அலுவலர்கள் உள்ளிட்ட 21 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்.
இவர்களுக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.
பிரதேச செயலக தாபன அலகு முடக்கப்பட்ட நிலையிலும் அங்குள்ள அத்தியாவசிய சேவைகள் மாற்று அலுவலர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

## கடவுளிடம் பாரம் கொடுத்தவரிடம் சுகாதார அமைச்சை ஒப்படைப்பதா?

### சாடுகின்றது எதிர்க்கட்சி

கொழும்பு, ஓக.18
மக்களை பாதுகாக்கும் பொறுப்பை கடவுளிடம் ஒப்படைப்பதாகக் கூறிய கெஹலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளமை பொருத்தமற்றதாகும்.
இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;
பேராசிரியர் திஸ்ஸ விதாரண, விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே, வைத்தியர் ரமேஷ் பத்திரண, கலாநிதி சீதா அரம்பேபொல மற்றும் பேராசிரியர் சன்ன ஜயசுமண ஆகிய சுகாதாரத்துறையில் நிபுணத்துவம் உடையவர்கள் சுகாதார அமைச்சில் உள்வாங்கப்படுவர் என்று எதிர்பார்க்கப்பட்டது.
ஆனால் கெஹலியவிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது பொருத்தமற்றது.
நாட்டு மக்களைப் பாதுகாப்பதில் அரசு முழுமையாக தோல்வியடைந்துள்ளது. முதலாவது அலையின் போது நாட்டை முடக்க வேண்டும் என்று கோரிய போது 28 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டமைக்காக நாட்டை முடக்க முடியாது என்று கூறிய அரசு, தற்போது சாவுகளின் எண்ணிக்கை 6 ஆயிரத்தைக் கடந்துள்ள நிலையிலும் அதே நிலைப்பாட்டிலேயே உள்ளது.
முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முகநூல் பார்ப்பதில்லை என்று கூறியுள்ளார். ஆனால் தற்போதைய ஜனாதிபதி பத்திரிகைகளைக் கூட பார்ப்பதில்லை. ஆளும் தரப்பில் கட்சிக்குள்ளும் ஒற்றுமை இல்லை. அரசுக்குள்ளும் ஒற்றுமை இல்லை. தற்போது அமைச்சரவையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் பயனற்றவை.
இரவு நேர ஊரடங்கு அமெரிக்கா, சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளுக்கு பொருந்துமே தவிர இலங்கைக்கு பொருத்தமானதல்ல. -என்றார். (எ-இ)

# பலாத்காரமாக தடுப்பூசிகள் சிங்கள ராவய போர்க்கொடி

கொழும்பு, ஓக.18
கொரோனா தடுப்பூசி வேலைத் திட்டத்துக்கு அமைவாக பலாத்காரமாக கொரோனா தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடொன்று சிங்கள ராவய கட்சித் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரினால் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது;
கொரோனா தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளும்படி அரசு கட்டாயப்படுத்துவது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.
தடுப்பூசி ஏற்றாதவர்கள் அரச நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களுக்குச் செல்வதற்கு தடையென அரசு எவ்வாறு கூற முடியும்.
இந்த தடுப்பூசிகளுக்கு உத்தரவாதம் உள்ளதா?. இதை ஏற்றிக்கொள்வதால் வைரஸ் தொற்று ஏற்படாதெனவும் சாவடையமாட்டார்கள் என உத்தரவாதம் உள்ளதா?
கொரோனாத் தடுப்பூசி வேலைத் திட்டத்துக்கு அமைவாக பலாத்காரமாக கொரோனா தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாம் எமது குழுவுடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடொன்றை கையளித்தோம். -என்றார்.
சிங்கள ராவய கட்சியின் உறுப்பினர்கள் உள்ளிட்ட சட்டத்தரணிகள் சிலரும் இதில் கலந்துகொண்டிருந்தனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் வாரங்களில் தடுப்பூசிகள் பயனளிக்கா!

## அடுத்த அலையில் தப்பவே உதவும்



கொழும்பு, ஓக.18

**நாட்டில் தற்போது தடுப்பூசி வழங்கும் பணிகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டாலும், அது தற்போதைய அபாய நிலைமையை அல்லது எதிர்வரும் வாரங்களில் பதிவாகப் போகும் சாவுகளை கட்டுப்படுத்தாது.**

இவ்வாறு விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் சிறுவர் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் லக்குமார பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள இலங்கை மருத்துவ சங்கத்தின் கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பில் காணொலியூடாக கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

அடுத்த அலையிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காகவேனும் சகலரும் இப்போதே தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இலங்கையில் கொவிட் பரவல் ஆரம்பித்த போது இவ்வாறான பாரதூரமான நிலைமையை எதிர்கொள்வோம் என்று எதிர்பார்க்கவில்லை.

உலகளாவிய ரீதியில் கொவிட் பரவலில் அபாயம் மிக்க நாடுகளில் ஒன்றாக இலங்கை காணப்படுகின்றது.-என்றார். (எ-இ)




# 146 எம்.பிக்களே தடுப்பூசி ஏற்றினர்

கொழும்பு, ஓக.18

225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 146 பேர் மட்டுமே கொரோனாத் தடுப்பூசிகளை ஏற்றிக்கொண்டுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஊடகவியலாளர் ஒருவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கி, ஓகஸ்ட் 12ஆம் திகதி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் செயற்றிட்டம் பெப்ரவரி 16ஆம் திகதி தொடங்கியது. தற்போதுவரை 146 பேர் மட்டுமே கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

122 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அஸ்ட்ராசெனகா தடுப்பூசிகளைப் பெற்றுள்ள அதேநேரத்தில், 24 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஸ்புட்னிக்-வீ தடுப்பூசிகளைப் பெற்றுள்ளனர்.

ஆனால், கொரோனா தடுப்பூசிகளை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்களின் விவரங்கள் தங்களிடம் இல்லை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# இலங்கைக்கு தெற்கே நேற்று நில அதிர்வு




கொழும்பு, ஓக.18

இலங்கைக்கு தெற்கே இந்து சமுத்திரத்தில் 5 மெக்னிட்யூட் அளவில் நில அதிர்வு பதிவாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 6.43 மணி அளவில் இந்த நில அதிர்வு பதிவாகியுள்ளது என்று புவிச் சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் அநுர வல்பொல தெரிவித்தார்.

இலங்கைக்கு தெற்காக இந்து சமுத்திரத்தில் ஆயிரத்து 200 கிலோமீற்றர் தொலைவில் நில அதிர்வு பதிவாகியுள்ளதால், நாட்டுக்கு எவ்வித பாதிப்புகளும் இல்லை என அவர் கூறினார். (எ-இ)

# யானை சுட்டுக் கொலை; ஒருவர் பொலிஸால் கைது

கொழும்பு, ஓக.18

யால வலயத்தின் மூன்றாம் பிரிவில் யானை ஒன்று கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யானையை சுட்டுக்கொல்வதற்கு பயன்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் துப்பாக்கியின் உரிமையாளரே கைது செய்யப்பட்டுள்ளார் என்று வனஜீவராசிகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைக்கு மூன்று விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

வனஜீவராசிகள் திணைக்களத்தினூடாக விசாரணை ஒன்றும், பொலிஸாரால் தனி விசாரணையும், ஒன்றிணைந்த விசாரணையுமாக மூன்று கட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வனஜீவராசிகள் உதவி பணிப்பாளரின் தலைமையில் இந்த குற்றச்செயல் தொடர்பில் விசாரணையொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. யானை கொலை செய்யப்பட்டமை தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், உடற்கூற்று பரிசோதனையும் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய, யானையின் உடலை புதைப்பது தொடர்பான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என வன ஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார். (எ-இ)

## சுற்றறிக்கைகளை மீறிச் செயற்படும்

# வங்கிகள், லீசிங் நிறுவனங்களின் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வலியுறுத்து!




கொழும்பு, ஓக.18

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளை மீறிச் செயற்படும் வங்கிகள் மற்றும் லீசிங் நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்த இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கொவிட் -19 கொரோனா தொற்று அச்சுறுத்தலால் பொது மக்கள் சிரமங்களுக்கு ஆளாகியுள்ள நிலையில், இலங்கை மத்திய வங்கியின் நிதி கட்டுப்பாட்டு பிரிவால், லீசிங் நுகர்வோருக்கு நிவாரணமொன்று பெற்றுக்கொடுப்பதற்காக கடந்த மே மாதம் சுற்றறிக்கைகள் சில வெளியிடப்பட்டிருந்தன.

அந்த சுற்றறிக்கைகளின் படி 2021 ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு லீசிங் நுகர்வோரிடமிருந்து தாமதத்துக்கான, வட்டி அறவிடல் மற்றும் வாகனங்களை கையகப்படுத்தல் ஆகியவற்றை நிறுத்தும் படியும் பிறிதொரு நிவாரணமொன்றை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது.

எனினும், அந்த சுற்றறிக்கைகளை மீறி வங்கிகள் மற்றும் லீசிங் நிறுவனங்கள் தாமதத்துக்கான வட்டி செலுத்தும்படி தமது நுகர்வோருக்கு எழுத்து மூல ஆவணங்களை அனுப்பி வைத்துள்ளனர்.



அவ்வாறு ஆவணங்களை அனுப்பி வைத்தது மட்டுமல்லாமல் சில லீசிங் நிறுவனங்கள் நுகர்வோரின் வாகனங்களையும் கையகப்படுத்தியுள்ளன.

சுற்றறிக்கையை வெளியிட்ட இலங்கை மத்திய வங்கியானது, தனது சுற்றறிக்கையை மீறிய வங்கிகள் மற்றும் லீசிங் நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் லீசிங் நுகர்வோர் பெரும் துன்பத்துக்கு ஆளாகியுள்ளனர்.

நுகர்வோர் சிரமத்துக்கு உள்ளாகியுள்ள நிலையில், மத்திய வங்கி மௌனமாக இருப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்த நிறுவனங்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நாம் மத்திய வங்கியிடம் கேட்டுக்கொள்கிறோம். -என்றுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தொற்றால் வவுனியாவில் மூவர் சாவு!



வவுனியா,ஓக.18

**வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த இரு பெண்கள் உள்ளிட்ட மூவர் கொரோனாத் தொற்றுக் காரணமாக நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர்.**

சுகவீனம் காரணமாக குறித்த மூவரும் அண்மையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் அவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டது.

இதனையடுத்து மருத்துவமனையின் கொரோனா விடுதியில் மூவரும் சேர்க்கப்பட்டனர்.

எனினும் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் இரவு மூவரும் உயிரிழந்தனர். இவர்கள் மூவரும் 75 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-110)

# கஜேந்திரகுமாருக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு, ஓக.18




தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின், தலைரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தனக்கும் தனது மனைவி மற்றும் மகளுக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அண்மைக்காலமாகத் தன்னுடன் நெருங்கிப் பழகியவர்கள் தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டு. பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கோரியுள்ளார். (எ-இ)

## நான்கு மாடிக் கட்டடத்தில் தீ விபத்து

கொழும்பு, ஓக.18

கிரிபத்கொடையில் 4 மாடிக் கட்டடம் ஒன்றில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. அந்தக் கட்டடத்தில் இருந்த 4 சிறுவர்கள் உட்பட 12 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீப்பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக மூன்று தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தீப்பரவலுக்கான காரணம் கண்டுபிடிக்கப்படாத நிலையில், பொலிஸார் விசாரணை களை ஆரம்பித்துள்ளனர். (எ-இ)

# திட்ட நிறைவு தொடர்பான முன்னேற்றக் கலந்துரையாடல்

முல்லைத்தீவு,ஓக.18



முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் மீள்குடியேறியவர்களுக்கான உதவி வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான திட்ட நிறைவு முன்னேற்றக் கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் சூம் செயலி ஊடாக நடைபெற்றது.

மேலதிக மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் திட்ட முன்னேற்றம் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

குறித்த திட்டமானது பெண்களை மையமாகக் கொண்ட குழுக்களை வலுப்படுத்தல்,குடிதண்ணீர்த் திட்டம், கொவிட் தொடர்பான விழிப்புணர்வு, சட்ட ரீதியான ஆவணங்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் வாழ்வாதார உதவிகள் வழங்கல் என்பவற்றை உள்ளடக்கியதாக அமையப்பெற்றுள்ளது.

கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இக் கலந்துரையாடலில் மேலதிக மாவட்டச் செயலர், மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், ஒபர் சிலோன் நிறுவன உத்தியோகத்தர்கள் நேரடியாகக் கலந்து கொண்டதுடன், பிரதேச செயலாளர்கள் குறித்த திட்டத்துடன் சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவன உத்தியோகத்தர்கள் சூம் செயலியூடாகவும் கலந்து கொண்டனர். (ஐ-115)

# நெஞ்சு வலி ஏற்பட்டு மூதாட்டி உயிரிழப்பு

கைதடி, ஓக.18



நெஞ்சு வலி ஏற்பட்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மூதாட்டி சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கைதடி கிழக்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த 74 வயது மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்தார்.

திடீரென மூதாட்டிக்கு நெஞ்சு வலி ஏற்பட்டதையடுத்து சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

இவர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலை உயிரிழந்தார்.

குறித்த உயிரிழப்பு தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு, நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (ஐ-9)

# ஆசிரியர்களின் பிரச்சினை பேச்சு ஊடாக தீர்க்கப்படும்

## *அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.18



ஆசிரியர்கள் முன்னெடுத்துள்ள வேலை நிறுத்தப் போராட்டம் பேச்சு ஊடாகத் தீர்க்கப்படும் என புதிய கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கல்வி அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுகளுக்கும் ஒரு கடினமான பணி உள்ளது. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சவாலான நிலைமையிலிருந்து மீள்வதற்கு அனைத்து அமைச்சர்களும் ஜனாதிபதியுடன் இணைந்து, சிறந்த முறையில் கடமையாற்றுவோம்.

"நமது குழந்தைகள் நம் நாட்டின் எதிர் காலம்" ஆகவே அதை ஆழமாகப் புரிந்துகொண்டு செயற்பட நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம். நாங்கள் எங்கள் விருப்பத்தின் பேரில் சத்தியம் செய்கிறோம். தியாகம் மற்றும் தேசத்தின் நலனுக்காக அர்ப்பணிப்புடன் நிச்சயம் சேவையாற்றுவோம்.

நாங்கள் மக்களுக்காக செய்யக்கூடிய வேலைகளில் உறுதியாக இருக்கிறோம். பதவிகளுக்காக சேவை செய்யவில்லை. ஆசிரியர் பிரச்சினைகளுக்கு பேச்சின் ஊடாக தீர்வு முன் வைக்கப்படும் - என்றார். (எ-இ)

# தொலைத்தொடர்பு நிறுவனத்தின் பெயரால் தொடரும் மோசடிகள்

## *ஆசைவார்த்தைகளில் மயங்கும் மக்கள்*

வவுனியா,ஓக.18

தொலைத்தொடர்பு நிறுவனத்தின் பெயரை பாவித்து 25 ஆயிரம் ரூபா பணத்தை மோசடி செய்த சம்பவம் ஒன்று நேற்று வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

போரில் கணவனை இழந்து ஒரு பிள்ளையுடன் வாழ்ந்து வரும் குடும்பப் பெண் ஒருவரே இவ்வாறு ஏமாற்றப்பட்டு பணத்தை பறிகொடுத்துள்ளார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் கருத்து தெரிவிக்கையில்,

தொலைத்தொடர்பு நிறுவனத்தின் தொலைபேசி இலக்கங்களிலிருந்து அழைப்பை ஏற்படுத்தி, தொலைத்தொடர்பு நிறுவனத்தின் உயரதிகாரி என தெரிவித்து, போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசிடமிருந்து பணம் பெற்றுத் தருவதாக ஆசை வார்த்தை காட்டினர். இதை நம்பி 25 ஆயிரம் ரூபா பணத்தை இழந்துள்ளேன் - என்றார்.

வவுனியாவில் இயங்கும் ஈசி காஸ் சேவை நடைபெறும் வியாபார நிலையங்களினூடாக இவ்வாறான மோசடி சம்பவங்கள் அதிகமாக இடம்பெற்று வருகின்றன. இதனால் பலர் தமது பணத்தை இழந்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

அப்பாவி மக்களின் அறியாமையை பயன்படுத்தி, தொடர்ச்சியாக நடைபெறும் இவ்வாறான மோசடி நடவடிக்கை தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பலத்தை உணர்வதே புத்திசாலித்தனம்

**1999** ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் ஓயாத அலைகள் 3 தாக்குதல் தொடங்கப்பட்டது. யாராலும் வீழ்த்த முடியாது என்று வர்ணிக்கப்பட்ட ஆனையிறவுப் பெரும் படைத்தளம் விடுதலைப் புலிகளால் வெற்றி கொள்ளப்பட்டது. அதன் பின்னர் தலைநகர் கொழும்பில் கட்டுநாயக்கா வான்படைத்தளம் மீது வெற்றிகரமான தாக்குதல் விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்டது. தொடர்ந்து தீச்சுவாலைப் போர் நடவடிக்கையின் ஊடாக சிறிலங்கா இராணுவத்தை புறமுதுகு காட்டி ஓட வைத்து வெற்றிக் கொடியை விடுதலைப் புலிகள் நாட்டினர். இராணுவப்பலத்தில் விடுதலைப் புலிகள் மேலோங்கியிருந்த காலத்தில், நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட சூழலில் சமாதானப் பேச்சுக்கு இலங்கை அரசு இணங்கியது. இன்னொரு வடிவில் சொல்வதானால் விடுதலைப் புலிகளின் இராணுவப் பலத்தால் இலங்கை அரசு சமாதானப் பேச்சு மேசைக்கு இறங்கி வந்தது. தற்போது கொரோனாப் பேரிடருக்கு மத்தியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்குச் செல்வதற்கான எத்தனத்தில் ராஜபக்ச அரசு ஈடுபட்டுள்ளது. தனித்து சிங்கள – பௌத்த வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட அரசு என்றும் – சர்வதேசம் எம்மைக் கட்டுப்படுத்த முடியாது என்றும் – பிதற்றிய ராஜபக்ச அரசே கூட்டமைப்புடனான பேச்சுக்கான எத்தனத்தை ஆரம்பித்துள்ளது.

அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரனுக்கும், இலங்கை அரசு சார்பில் ஜி.எல்.பீரிஸூக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றிருந்தது. பஸில் ராஜபக்சவுக்கும், கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு விரைவில் தொடங்கும் என்று இதன் பின்னர் தகவல்கள் வெளியாகியுள்ளன. தமிழ்க் கூட்டமைப்புடன் பேச்சு நடத்த ராஜபக்சக்கள் முனையும் புறச்சூழலைக் கவனத்தில் கொள்ளவேண்டும். சர்வதேச ரீதியாக எழுந்துள்ள அழுத்தங்களால் வேறுவழியின்றி பேச்சு மேசைக்கு ராஜபக்சக்கள் தள்ளப்படுகின்றனர். தமிழர்களைப் பொறுத்தவரையில் இந்தப் புறச்சூழல்தான் பலமானது. அதனைக் கட்டியெழுப்புவதற்கே கடந்த காலங்களில் பாடுபட்டனர். ஜெனிவா உள்ளிட்ட புறச்சூழ அழுத்தங்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கு தமிழர் தரப்புடன் பேசியாகவேண்டிய நிர்ப்பந்தத்தாலேயே ராஜபக்சக்கள் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தில் கூட்டமைப்பு பேச்சு நடத்துவது சரியா என்ற விவாதம் எழுந்துள்ளது. பேச்சு நடத்துவதற்கு இதுதான் சரியான சந்தர்ப்பம். ஆனால், நிபந்தனைகளுடன் பேச்சுக்கு செல்வதே பொருத்தம். ஏனெனில் ராஜபக்சக்கள் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தத்திலிருந்து அவர்கள் தங்களை விடுவித்துக் கொள்வதற்கு முயற்சிக்கின்றார்கள். இதுபோன்ற சந்தர்ப்பத்திலேயே தமிழர்கள் தங்கள் நிபந்தனைகளை, அதிகூடிய அதிகாரப் பகிர்வுக் கோரிக்கையை முன்வைக்க முடியும். நெருக்குவாராத்தில் நிர்ப்பந்தத்தில் இருக்கும்போதே எமது உச்சபட்ட நிபந்தனைகளை எதிர் தரப்புக்கு விதிக்க முடியும்.

இந்தச் சந்தர்ப்பம் எப்போதும் தமிழர் தரப்புக்கு வாய்க்காது. கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை சரிவரப் பயன்படுத்த வேண்டும். இப்போதுள்ள சூழலில் ராஜபக்சக்களுடனான பேச்சுக்கு நிபந்தனைகள் விதிப்பதானது, பாதிப்பானது அல்லது பொருத்தமானது அல்ல என்று கூற முடியாது. தமிழர் தரப்பையே கணக்கிலெடுக்காது செயற்பட்டவர்கள், தமிழர் தரப்பைத்தேடி வரும்போதே அதனைக் கெட்டியாகப் பிடித்து எமக்கு வேண்டியதைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இங்கு ஊன்றிக் கவனிக்கவேண்டிய இன்னொரு விடயமும் இருக்கின்றது. போர் முடிந்த பின்னர் மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது ஆட்சிக்காலத்தில் **2011** ஆம் ஆண்டில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசின் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவுடன் **18** தடவைகள் பேச்சு நடத்தியிருந்தது. இந்தப் பேச்சுக்கள் எல்லாம் நடந்து கொண்டிருந்தாலும் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. மாறாக திடீரென நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாகத்தான் தீர்வு என்று ஒரேயடியாக பேச்சுக்கு முழுக்குப்போட்டது ராஜபக்ச அரசு.

அன்று தமிழர் தரப்பின் நல்லிணக்கத்தை வெளிப்படுத்த எதுவித நிபந்தனைகளும் இன்றித்தான் ராஜபக்சக்களுடன் கூட்டமைப்பு பேச்சு நடத்தியது. எனவே மீண்டும் அவ்வாறான ஒரு தவறைச் செய்யாமல் நிபந்தனைகளை கூட்டமைப்புவிதிக்கவேண்டும். தமிழ் மக்கள்கூட்டமைப்புக்கு வழங்கிய ஆணைக்கு அமைவாக, சமஷ்டி முறையிலான தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் பேச்சுக்கான போக்குகளும் அதற்கான நிபந்தனைகளும் அமைய வேண்டும்.



# கொரோனாவுடன் இன்னமும் 2 ஆண்டுகள் வாழவேண்டும்

## கூறுகிறார் மொட்டுக்கட்சியின் செயலர்

**கொழும்பு, ஓக. 18**

**இன்னும் 2 வருடங்களாவது கொரோனாவுடன்தான் வாழ வேண்டிவருமென மருத்துவநிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். தற்போதைய சூழ்நிலையில் மக்களை காப்பதற்கு உள்ள ஒரே வழி தடுப்பூசிதான். அதனை வழங்கும் நடவடிக்கையை அரசு துரிதப்படுத்தியுள்ளது. எனினும், சிற்சில தவறுகளை பெரிதுபடுத்தி மக்களை குழப்புவதற்கு எதிரணி முற்படுகின்றது. இது அரசியல் நடத்துவதற்கான நேரம் அல்லவென்பதை எதிரணி உறுப்பினர்கள் புரிந்துசெயற்பட வேண்டும்.**

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா நெருக்கடி நிலைமையால் நாடு என்ற வகையில் எமக்கும் பல சவால்களை சந்திக்கவேண்டியேற்பட்டுள்ளது. அமெரிக்கா, பிரிட்டன், சீனா உட்பட உலக நாடுகளிலும் இதே நிலைமைதான் காணப்படுகின்றது. பலம் பொருந்திய நாடுகள்கூட பின்னடைவைச் சந்தித்துள்ளன. இவ்வாறான நெருக்கடி நிலைமையிலும் நாட்டு மக்களுக்காக முன்னெடுக்கப்படவேண்டிய அபிவிருத்தி திட்டங்களையும், எதிர்கால வேலைத் திட்டங்களையும் செயற்படுத்திவருகின்றோம். கடந்த வருடம் மார்ச்சில் நாட்டை முடக்கினோம். அதன் பின்னரும் முடக்கப்பட்டது. ஆனால் அவ்வப்போது வைரஸ் தொற்று தலைதூக்கும் அபாயம் காணப்படுகின்றது. அடுத்து வரும் வாரங்கள் அல்ல அடுத்துவரும் ஒவ்வொரு நாளும் தீர்க்கமானது. வைத்திய நிபுணர்களின் கூற்றின்பிரகாரம், குறைந்த பட்சம் இன்னும் 2 வருடங்களாவது கொரோனாவுடன்தான் வாழப்பழக வேண்டிவரும்.

எதிர்பாராதவிதமாகத்தான் தொற்று நிலை உருவானது. ஆனாலும் நாட்டு மக்களுக்காக செய்ய வேண்டியதை நாம் செய்துவருகின்றோம். தற்போதைய சூழ்நிலையில் வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்கு தடுப்பூசிதான் ஒரே வழி. அதனை துரிதமாக வழங்கி, மக்களை மீட்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

கொரோனா தொற்று ஏற்பட்டதிலிருந்து எமது நாட்டு சுகாதாரத்துறையினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றனர். பலருக்கு நித்திரைகூட இல்லை. ஆனால் ஒரு சிலரால் இழைக்கப்படும் சிறு தவறைக்கூட பெரிதுபடுத்தி, நாட்டில் தீ மூட்டி மக்களை குழப்புவதற்கு எதிரணி முற்படுகின்றது. இது அரசியல் நடத்துவதற்கான நேரம் அல்ல என்பதை எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எதிரணி அரசியல் பிரமுகர்கள் புரிந்துகொள்ள வேண்டும். பிறகு அரசியல் நடத்தலாம். மக்களை குழப்ப வேண்டாமென கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (ஓ,44)

# சிகிச்சை பெற வந்தவர்களில் 31 பேருக்கு கோவிட் தொற்று

சாவகச்சேரி, ஓக.18

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற வந்தவர்களில் கடந்த 30 மணி நேரத்தில் 31 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 6 மணி தொடக்கம் நேற்று மதியம் 12 மணி வரையில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் சாவகச்சேரி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் உள்ளிட்ட 31 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் 20 பேருக்கும், நேற்று 11 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. மருத்துவமனை கொரோனா விடுதிகள் நிறைந்துள்ள நிலையில் தொற்றாளர்களை வேறு சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்ப ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு 09 . 01 . 1937



உதிர்வு 17 . 08 . 2021

## சிங்கராசா பரிபூரணம்

உரும்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராசா பரிபூரணம் அவர்கள் நேற்று (17.08.2021) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சாமிநாதன் சிங்கராசா (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான திருச்செல்வம் (சோமு) பாக்கியம் தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான சாமிநாதன் (இராமர்), நேசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சந்திரன் மற்றும் சிவநேசன் (லண்டன்), குணநேசன் (லண்டன்), சந்திரகாந்தா (சாந்தி), சந்திரவதனி (கவிதா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நெல்சன் நித்தியானந்தன் (இலங்கை வங்கி), யூலியற் (லண்டன்), உதயகுமாரி (லண்டன), லிங்கேஸ்வரன் (ரவி-பிரான்ஸ்), உதயா (இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமியும், மைக்கல் (லண்டன்), யக் (லண்டன்), யோடன் (லண்டன்), சந்திரநிலானி (இந்தியா), டிலானி (யாழ் பல்கலைக்கழகம், விஞ்ஞானபீடம்), டிலுக்சன் (சென் ஜோன்ஸ் கல்லூரி), நவீன் (சென் ஜோன்ஸ் கல்லூரி), அஸ்வின் (சென் ஜோன்ஸ் கல்லூரி), லவீன் (லண்டன்), லஸ்வி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், அஷ்லின்ராஜ் (இந்தியா), லக்ஸ்மி (இந்தியா) ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான இரட்ணம், அரியநாயகம், இராசநாயகம், அன்னலட்சுமி, சின்னத்துரை மற்றும் இராஜேஸ்வரி, இராசதுரை, செல்வராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (18.08.2021) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித மைக்கல் சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தற்போதைய கொரோனா நிலைமை காரணமாக உங்களது அனுதாபங்களை தொலைபேசி ஊடாக தெரிவித்துக்கொள்ளவும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 075 7193** - நெல்சன் நித்தியானந்தன் சந்திரகாந்தா
**076 77 38035**

**தகவல்: குடும்பத்தினர்.**




## நலம் தரும் திருத்தலம் நல்லூர்!

ஆறுமுகம் உறைந்திடும் பெரும்தலம் நல்லூர்!
ஆறுதல் அளித்திடும் அருந்தலம் நல்லூர்!
தேறுதல் தந்திடும் திருத்தலம் நல்லூர்!
கூறிட நலம்தரும் ஒருதலம் நல்லூர்!

**ப.மகேந்திரதாசன்,** *நாயன்மார்கட்டு*

# மனித உயிர் இறைவனின் கொடை இதைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்

*மன்னார் மறைமாவட்ட ஆயர் தெரிவிப்பு*



மன்னார்,ஓக.18

"மனித உயிர் இறைவனிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஒரு கொடை. அது ஒரு தாயின் கருவிலுள்ள உயிரை எத்தனையோ பேர் அழிக்கின்றனர். இது இறைவனுக்கு எதிரான விடயம் என்பதை உணராத இந்தச் சமூகம் செயற்படுகின்றது." இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மருதமடு ஆலயத்தின் பெருவிழாவின்போது உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று எமது நாட்டிலே மனித உயிருக்கும் மனித உடலுக்கும் எதிராக எத்தனையோ அநியாயங்கள் ஏற்பட்டு வருகின்றன.

குறிப்பாக சொல்வோமானால் அடிப்படை உரிமைகளை பாதுகாக்க எமது சமுதாயம் தவறுகின்றது.

மனித உயிர் இறைவனிடமிருந்து கிடைக்கப்;பெற்ற ஒரு கொடை. இருந்தும் ஒரு தாயின் கருவிலுள்ள உயிரை எத்தனையோ பேர் அழிக்கின்றனர். இறைவன் எமக்கு வழங்கியுள்ள நல்ல உடலை மது. போதைவஸ்து பாவனைகளால் இன்னும் பலவிதமான காரணத்தினால் தங்கள் உடல்களை மாசுப்படுத்துகின்றனர்.

ஆகவே நாம் எமக்கு இறைவன் தந்த உடலை மிகவும் பாதுகாப்பாக கையாள வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆகவே மரியன்னையின் நம்பிக்கையில் நாமும் வளர்ந்து, ஆன்மாவையும் உடலையும் தூய்மையாக வைத்திருக்க நாம் முயற்சிகள் எடுப்போம் - என்றார். (ஐ-60)

# சாவகச்சேரி பிரதேசத்தில் 13 பேருக்கு தொற்றுறுதி

சாவகச்சேரி,ஓக.18

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் 100 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட எழுமாற்று பரிசோதனையில் 13 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சாவகச்சேரி, கொமர்ஷல் வங்கி உத்தியோகத்தர்கள் பிரதேசத் தில் தனிமைப்படுத்தலில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்டோர் பரிசோதனையில் கலந்து கொண்டனர். இவர்களில் 90 பேருக்கு மேற்கொண்ட அன்டிஜென் பரிசோதனையில் தனிமைப்படுத்தலில் உள்ள சாவகச்சேரி நகர பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் மூவரும், வரணி, நாவற்குழி , எழுதுமட்டுவாழ்,ஆகிய பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் தலா இருவர் வீதமும்,மந்துவில் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் ஒருவரும் வெளி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகங் களைச் சேர்ந்த மூவருமாக 13 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் பத்துப் பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்காக பெறப்பட்ட மாதிரிகள் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-9)

# அராலி கடற்றொழில் சங்கத்தின் ஏலம் விடும் கட்டடம் உடைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 18

அராலி மத்தி அம்பாள் கடற்றொழில் சங்கத்தின் மீன் ஏலம் விடப்படும் கட்டடத்தை இனம்தெரியாத நபர்கள் உடைத்தெறிந்துள்ளனர். அத்துடன் அந்தக் கட்டடத்தின் பூட்டுகளையும் உடைத்துள்ளனர்.

அந்தக் கட்டடத்துக்கு சுமார் 150 மீற்றர் தொலைவிலுள்ள வீடு ஒன்றும் எரியூட்டப்பட்டுள்ளது. வீடு எரிந்ததை அவதானித்த வீட்டு உரிமையாளர் விரைந்து செயற்பட்டு தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளார். நேற்றுமுன்தினம் பின்னிரவு இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றன. (ம-27)

# 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு வீடு வீடாகச் சென்று தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை

சாவகச்சேரி,ஓக.18

தென்மராட்சி பிரதேசத்தில் இதுவரை கொரோனாத் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாத 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று தடுப்பூசி ஏற்றவுள்ளனர். இதற்கமைவாக பிரதேச செயலக கிராம அலுவலர் பிரிவு ரீதியாக தடுப்பூசி ஏற்றுக்கொள்ளாத 60 வயதுக்கு மேற்பட்டோரின் விவரங்கள் பெறப்பட்டுள்ளன. பிரதேசத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட 12 ஆயிரத்து 553 பேர் உள்ள போதிலும் இதுவரை 5 ஆயிரத்து 31 பேர் மட்டுமே தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-9)

# கிளிநொச்சி பிரதேச செயலக காணிக்கிளை முடக்கப்பட்டது

கிளிநொச்சி, ஓக. 18

கிளிநொச்சி பிரதேச செயலகத்தின் காணிக்கிளை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் பாலசுந்திரம் ஜெயகரன் தெரிவித்துள்ளார்.

காணிக்கிளையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்தே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். குறித்த நடவடிக்கை எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தொடரும் என்றும் ஏனைய ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்படும் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் எதிர்வரும் திங்கட்கிழமை மீளத் திறப்பது குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆந்தைகள், வௌவாலுக்கா இரவு நேர ஊரடங்கு பிறப்பிப்பு?

## முருத்தெட்டுவஆனந்த தேரர் கேள்வி

கொழும்பு, ஓக. 18

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான இந்த அரசு மக்கள் செல்வாக்கை இழந்துவிட்டது. மாகாண சபைத் தேர்தலொன்று நடத்தப்படுமானால் இது தெட்டத்தெளிவாகத் தெரிய வரும்.

அதேபோல இரவுவேளையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆந்தைகள் மற்றும் வௌவால்களுக்காகவா? என கேட்கவிரும்புகின்றேன் என்று அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:



"தற்போதைய ஆட்சியாளர்களுக்கு தர்மம் என்றால் என்னவென்று புரியவில்லை. பிடிவாதபோக்கில் ஆட்சியை முன்னெடுத்துவருகின்றனர். இந்த அரசுக்கு வாக்களித்த மக்கள் இன்று எம்மிடம் கேள்வி எழுப்புகின்றனர். தேரரே, உங்களை நம்பித்தானே வாக்களித்தோம், இன்று என்ன நடக்கின்றது என கடும் விரக்தியை வெளியிடுவதுடன், அரசின் பயணம் மாற வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றனர்.

எரிவாயு இருக்கின்றதா?, கிழங்கு இருக்கின்றதா? என அன்று மஹிந்த ராஜபக்ச கேள்வி எழுப்பினார். ஆனால், இன்று எரிவாயுவும் இல்லை, கிழங்கும் இல்லை. எமது பலத்தை காட்டவேண்டிய நேரம்தான் வந்துள்ளது.

இரவுவேளையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆந்தைகளுக்கும், வௌவால்களுக்குமா இவ்வாறு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது? ஆட்சியாளர்கள் மக்களின் மனநிலையை அறிந்து செயற்பட வேண்டும். மக்களின் கோரிக்கைகளுக்கு செவிமடுக்க வேண்டும்.

முடிந்தால் மாகாண சபை அல்லது பொதுத்தேர்தலை நடத்திப்பாருங்கள். அரசுமீது மக்களுக்குள்ள நம்பிக்கை என்னவென்பது தெளிவாக தெரிய வரும்.

ஜே.ஆர். அன்று ஆறில் ஐந்து பெரும்பான்மையைப் பெற்றார். ஆனால் அடுத்த தேர்தலிலேயே அந்தக்கட்சியின் நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை 8 ஆகக் குறைந்தது. மக்களின் கோரிக்கை ஏற்கப்படாமையே இதற்கு பிரதான காரணம் என்பதை தற்போதைய அரசும் புரிந்து கொள்ள வேண்டும்- என்றார். (த-44)

# பேய்கள் நடமாடும் வேளையில் மக்கள் எங்கு செல்வார்கள்?

## ஜனாதிபதியிடம் கேட்கிறது ஒன்றிணைந்த பிரஜைகளின் கூட்டமைப்பு

கொழும்பு, ஓக. 18

**ஜனாதிபதி, இரவு முதல் அதிகாலை வரை ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளார். இரவில் பேய்கள் நடமாடும் வேளையில் மக்கள் எங்கு செல்லப் போகின்றனர்? இரவு 10 மணியிலிருந்து அதிகாலை 4 மணிவரையில் கொரோனா வைரஸ் பரவுமென்று ஜனாதிபதிக்குப் புலனாய்வுப் பிரிவினர் தகவல்கள் வழங்கியுள்ளனரா?**

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஒன்றிணைந்த பிரஜைகளின் கூட்டமைப்பின் ஒருங்கமைப்பாளர் சமீர குமார. கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கழுதைக்கு செல் என்று கூறினால், அது எங்கு செல்கின்றது? என்ன செய்கின்றது? என்று தெரியாது. அவ்வாறான செயற்பாட்டையே ஜனாதிபதி செய்து வருகின்றார். மக்கள் ஒன்றுகூடுவதைத் தடுக்க வேண்டும், பயணங்களைத் தடுக்க வேண்டும், மக்கள் ஓரிடத்தில் ஒன்றுகூடி செயற்படுவதைத் தடுக்க வேண்டும், நாட்டை முடக்குங்கள் என்று சுகாதார நிபுணர்கள், சுகாதார தொழிற்சங்கங்கள் என்பன ஒன்றிணைந்து கூட்டாகக் கோரிக்கை விடுத்து வருகின்றன. இதனைக் கேட்டுக்கொண்ட ஜனாதிபதி இதோ நாட்டை முடக்கு கின்றேன் என்று கூறி, இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணிவரை ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப் படுத்தியுள்ளார். இது குருடன் யானையைப் பார்த்த கதையாக உள்ளது. மக்கள் ஒன்றுகூடும் நேரங்களைத் தடுப்பதற்கு முயற்சி செய்யுங்கள் என்றே சுகாதார நிபுணர்கள் கோரினர். மக்கள் ஆங்காங்கே செல்வதையும் வாகனங்களில் பயணிப்பதையும் ரயில்களில் பயணிப்பதையும் தடுத்து நிறுத் துங்கள் என்றே சுகாதார நிபுணர்கள் தெரிவித்தனர். இதன் காரணமாகவே முடக்கம் ஒன்று தேவை என்று அவர்கள் கோரினர். ஆனால், ஜனாதிபதி இரவு முதல் அதிகாலை வரை ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளார். பேய்கள் நடமாடும் வேளையில் மக்கள் எங்கு செல்லப் போகின்றனர்? இரவு 10 மணியிலிருந்து அதிகாலை 4 மணிவரையில் கொரோனா வைரஸ் பரவுமென்று ஜனாதிபதிக்குப் புலனாய்வுப் பிரிவினர் தகவல்கள் வழங்கியுள்ளனரா?" என்று அவர் கேள்வி எழுப்பினார். (த-22)



## பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள்

மானிப்பாய்,ஓக.18

கொரோனாத் தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட மானிப்பாய், சுதுமலை, நவாலி மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கனடாவைச் சேர்ந்த மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர்களின் நிதிப்பங்களிப்பில் 239 குடும்பங்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன், பிரதேச இளைஞர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் க.உஷாந்தன், மானிப்பாய் இந்துக் கல்லூரி பழையமாணவர் சங்கத் தலைவர் ஜெ.வீரசிங்கம், உபதலைவர் ச.ஸ்ரீகாந்தன் மற்றும் மானிப்பாய் மேற்கு கிராம அலுவலர் பு.நிரூபன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஐ-159,18)

# சுகாதார அமைச்சு பதவி கிடைத்தமை பாக்கியம்!

## இப்படிக் கூறுகிறார் கெஹலிய

கொழும்பு, ஓக. 18

இலங்கையின் சுகாதார அமைச்சர் பதவி கிடைப்பதற்குப் பாக்கியம் செய்துள்ளேன் என்று புதிய சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஊடகத்துறை அமைச்சராக பதவி வகித்த கெஹலிய ரம்புக்வெல, சுகாதார அமைச்சராக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார். பதவி மாற்றம் தொடர்பாக ருவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், முன்னாள் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தொற்றுநோயைக் கையாள்வதில் சிறப்பாகச் செயற்பட்டமைக்கு நன்றி தெரிவித்தார்.

கொரோனா சவாலை தோற்கடிக்க அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# மக்கள் பாதுகாப்பு அவர்கள் கையில்

## சுயமுடக்கமே ஒரேவழி என்கின்றன எதிர்க்கட்சிகள்

கொழும்பு, ஓக. 18

நாட்டை முடக்குவதற்கு அரசு பிடிவாதமாக மறுத்துவரும் நிலையில் சுயமுடக்கமே ஒரே தீர்வு என்று எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன. மக்கள் இதன் ஊடாகவே தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி என்பன குறிப்பிட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எரான் விக்ரமரத்ன மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகியோர், மக்கள் சுயமுடக்கத்தைப் பின்பற்றவேண்டும் என்பதே தமது கட்சியின் நிலைப்பாடு என்று வலியுறுத்தியுள்ளனர்.

'அரசின் மீது தங்கியிராமல் மக்கள் தங்கள் பாதுகாப்பைக் கவனிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. நாடு முழுவதும் முழு நேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருப்பதைப் போன்று மக்கள் நடந்து கொள்ள வேண்டும்' என எரான் விக்ரமரத்ன செய்தியாளர் மாநாட்டில் கூறினார்.

இதேவேளை- மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரான அநுரகுமார திசாநாயக்க, மக்கள் தங்கள் சுய பாதுகாப்பைக் கருதி சுயமுடக்கத்துக்கு போகவேண்டும் என்று கோரியிருக்கின்றார்.

'நிபுணர்களின் கருத்துக்களை அரசு செவிமடுப்பதில்லை என்பதால் நாட்டை முடக்கும் தீர்மானத்தை அரசு மேற்கொள்ளும் என்று காத்திருப்பதில் அர்த்தமேதும் இல்லை. கடமைக்கு வருமாறு கேட்கப்பட்டிருந்தாலும் அரச ஊழியர்கள் வீடுகளில் இருக்க வேண்டும். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மருத்துவ நிபுணர்களின் பரிந்துரைகளை அலட்சியம் செய்து வெறுமனே அரச புலனாய்வுச் சேவைகளின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் மாத்திரமே செயற்படுகின்றார்' என அநுரகுமார குற்றஞ்சுமத்தினார். (ஒ.ஆ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

திரு. T.பிரஜாபதி
(Na.Dip.in Teach Primary)

உதயன் கல்விப் பிரிவு

பரீட்சை இலக்கம் 4

பெயர் : ...................................... நேரம் : 1 மணித்தியாலம் 15 நிமிடம் பகுதி 2

**1. பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை அளிக்குக.**

நாய் சென்ற இடமெல்லாம் குஞ்சுகளும் கூடவே சென்றன. நாயின் தலைமீது ஏறி நின்றன. நாயின் முதுகில் வரிசையாக அமர்ந்து கொண்டு வலம் வந்தன. நாயின் மீது ஏறி விளையாடின. தாய் வாத்து இல்லாததை அறிந்து குஞ்சுகளை ஒரு தாயைப் போன்று அக்கறையாக பொறுமையாக நாய் கவனித்தது.

1) நாய் சென்ற இடமெல்லாம் கூடவே சென்றவை எவை?

..............................................................................

2) குஞ்சுகளை ஒரு தாயைப் போன்று அக்கறையாகக் கவனித்தது எது?

3) பந்தியில் காணப்படும் சினைப் பெயர் ஒன்று தருக? ...........................

4) உவமானத்தை தெரிந்து எழுதுக?..........................................

5) உயர்திணைப் பெண்பால் பெயர்ச் சொல் ஒன்று தருக?

..............................................................................

6) இடம் என்பதன் எதிர்ச் சொல் யாது? ..........................................

(1x6=6)

**2. எழுத்துப் பிழையற்ற சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக**

1) அரண்மனை, அரண்மனை, அரன்மனை

2) நூலகம், நூளகம், நூழகம்

3) சுற்றுப்புரம், சுற்றுப்புறம், சுற்ருப்புறம்

(1x3=3)

**3. பின்வரும் சொல்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்குக**

1) தெரியும்/ அகத்தின்/ முகத்தில்/ அழகு ..........................................

2) சிங்கம்/ பின்தொடர்ந்து/ சிறிது தூரம்/ மான்குட்டிகளைப்/ சென்றது

..............................................................................

(1x2=2)

**4. பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக?**

1) மா பலா வாழை என்பன முக்கனிகளாகும்

2) நாளை பாடசாலைக்கு வருவாயா

3) என்னுடைய பென்சிலைக் காணவில்லை என்று குமுதா அழுதாள்

(1x3=3)

**5. பின்வருவனவற்றுக்கு பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக**

1) நேற்று இரவு.................. (மழை/ மலை) பெய்தது

2) அவன் ...........................(பொறி/ பொரி) வைத்து எலியைப் பிடித்தான்

(1x2=2)

**6. தொடக்கத்தில் தரப்பட்ட சொல்லின் ஒத்த கருத்துச் சொல்லைத் தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக**

1) ஆகாரம் (உறைவிடம்/ உணவு/ வானம்)

2) கண் (வதனம்/ நேத்திரம்/ பாதம்)

3) தாமரை ( திங்கள்/ மலர்/ கமலம்)

(1x3=3)

**7. பின்வரும் வாக்கியங்களுக்கான பொருத்தமான பயனிலைச் சொற்களை அடைப்புக்குள் இருந்து தெரிந்து அவற்றின் கீழ்க் கோடிடுக**

1) மாமா கடந்த வருடம் கொழும்புக்குப் ..................(போனார்/ போகிறார்)

2) நாளைக்கு மழை பெய்தாலும் ...................... ( பெய்கிறது/ பெய்யும்)

3) சூரியனைக் கண்ட தாமரைப் பூக்கள் .................( மலர்ந்தது/ மலர்ந்தன)

(1x3=3)

**8. தனிச் சொல்லை எழுதுக**

தெருக்கள் கூடுமிடம்.................................................. (1x1=1)

**9. பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்க**

அடம்பன் கொடியும் .................................................. (1x1=1)

**10. பின்வரும் சொல்லை பிரித்தெழுதுக**

வாழைப்பழம் = ........................+ ............................ (1x1=1)

**11. கீழே தரப்பட்ட கவிதையில் உள்ள வெற்றிடத்தை பூரணப்படுத்துக.**

குடை பிடித்து செருப்புமிட்டு
புத்தகமும் கொண்டு
குடுகுடென நடந்து வரும்

.................................................................. (1x1=1)

12. நாய்- குட்டி போல மீன் ........................................ (1x1=1)

**13. கீழே தரப்பட்ட படங்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

1) 

2) 

.......................................... .......................................... (1x2=2)

**14. பின்வரும் வாக்கியம் ஆங்கிலத்தில் சொல்லப்படும் விதத்தை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

பிறந்த நாள் வாழ்த்துக்கள்

.................................................................. (1x2=2)

**15.** பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களக் கருத்தை எழுதுக

1) எட்டு ................. 2) அண்ணா.................... (1x2=2)

**16.** பின்வரும் சிங்கள வாக்கியம் தமிழில் சொல்லப்படும் விதத்தை எழுதுக

பாசல கொஹேத ............................................................ (1x1=1)

தரப்பட்ட வெற்றிடங்களில் சரியான விடையை எழுதுக

**17.** பின்வரும் எண்ணை எழுத்தில் எழுதுக

4030..........................................................

**18.** பூக்களின் எண்ணிக்கையை ரோமன் எண்ணில் எழுதுக



..................................

**19.** எண் கோலத்தில் அடுத்து வரும் எண்ணை எழுதுக

3, 6, 9, 12 ..........................................

**20.** ஒரு கூடையில் 146 பழங்களும் மற்றைய கூடையில் 297 பழங்களும் உள்ளன. இரு கூடையிலும் உள்ள பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..........................................................................

**21.** கமல் திங்கட்கிழமை 169 சோடா மூடிகளை சேகரித்தான். செவ்வாய்க்கிழமை 210 சோடா மூடிகளை சேகரித்தான் எனின் திங்கட்கிழமையை விட செவ்வாய்க்கிழமை எத்தனை சோடா மூடிகளை அதிகமாக சேகரித்தான்?

..........................................................................

**22.** பின்வரும் உருவில் 5/8 பகுதியை நிழற்றுக.



**23.** பென்சிலின் நீளத்தை cm இல் தருக




............. cm

**24.** 303 இனிப்புக்களை மூன்று பேருக்கு சமனாக பகிர்ந்தால் ஒருவருக்கு கிடைக்கும் இனிப்புக்கள் எத்தனை?

..........................................................................

**25.** ஒரு பேருந்தில் 60 பேர் பயணிக்கலாம். அவ்வாறான 6 பேருந்துகளில் எத்தனை பேர் பயணிக்கலாம்?

..........................................................................

**26.** ஒரு முட்டையின் விலை ரூ. 14.00 எனின் 5 முட்டைகளை வாங்கிவிட்டு ரூ. 100.00ஐ கொடுத்தால் மீதி எவ்வளவு?

ரூ. ..................................................................

**27.** சூரியன் மறையும் திசைக்கு எதிர்த் திசை யாது?

..........................................................................

**28.** 1 kg சீனியின் விலை ரூ. 100.00 எனின் 500g சீனியின் விலை யாது?

..........................................................................

**29.** ஒவ்வொன்றும் 250ml கொண்ட 6 போத்தல்களில் நீர் நிரப்பப்பட்டுள்ளது. எனின் நிரப்பப்பட்ட நீரின் அளவை l,ml இல் தருக.

..................l .................ml

**30.** பின்வரும் 4 எண்களையும் ஏறுவரிசைப்படுத்தி எழுதுக

2300, 2003, 2030, 32000

..........................................................................

**31.** வரைபின் அடிப்படையில் தரப்பட்ட பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?




..........................................

(2x15=30)

சரியான விடையின் கீழ் கோடிடுக.

**32.** பச்சையாக உண்ணக்கூடிய உணவு வகை பின்வருவனவற்றுள் எது?

1) கத்தரிக்காய் 2) உருளைக்கிழங்கு 3) வல்லாரை

**33.** ஆணி வேருள்ள தாவரம்

1) வேம்பு 2) பனை 3) கமுகு

**34.** இலங்கையின் தேசிய மரம்

1) வெள்ளரசு மரம் 2) குங்கிலிய மரம் 3) நாகமரம்

**35.** நீர் தேங்கி நிற்கும் இடங்களை மூடுவதால் அழிந்து செல்லக்கூடிய நோய்க்காவி?

1) நுளம்பு 2) ஈ 3) எறும்பு

**36.** நீருடன் நன்கு கலக்கக்கூடிய திரவம்

1) மண்ணெண்ணெய் 2) வினாகிரி 3) பெற்றோல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**37.** சக்தி கூடுதலாக விரயமாகும் விளையாட்டு அல்லாதது
1) கயிறிழுத்தல் 2) பாரம் தூக்குதல் 3) கரம் விளையாட்டு

**38.** பின்வரும் உணவு வகைகளுள் தானிய வகையைச் சேர்ந்த உணவு
1) கோதுமை 2) வற்றாளை 3) போஞ்சி

**39.** பின்வருவனவற்றுள் தாவரங்களை சாய்த்து புரட்டி தாவரக்கிளைகளை ஒடித்து உண்ணும் பிராணி
(1) யானை 2) பசு 3) புலி

**40.** உடலொலி பெருக்கி பயன்படுத்துபவர்
1) கொல்லன் 2) வைத்தியர் 3) மாலுமி

**41.** இடி மின்னலிலிருந்து பாதுகாப்பு பெற உயரமான கட்டடங்களின் உச்சியில் பொருத்தப்படுவது
1) வானிலைக் கம்பி 2) உணர்கொம்பு 3) இடிதாங்கி

**42.** அலுமினியப் பாத்திரத்தில் உணவுடன் சேர்த்து சமைக்கும் போது தவிர்க்க வேண்டியது
1) கடுகு 2) உப்பு 3) வினாகிரி

**43.** பின்வருவனவற்றுள் கட்புலன் ஊடாக தகவல்கள் பெறத்தக்க ஊடகம் அல்லாதது
1) செய்திப்பத்திரிகை 2) வானொலி 3) தொலைக்காட்சி

**44.** நாகமலரின் நிறமும் இதழ்களின் எண்ணிக்கையும் முறையே
1) வெள்ளை 4 2) வெள்ளை 3 3) சிவப்பு 4

**45.** பிரதான வீதி ஒன்றின் குறுக்கே கடக்கும் இடத்தில் வரையப்பட்டிருக்கும் கோடுகளின் நிறம்
1) வெள்ளை 2) சிவப்பு 3) கறுப்பு

**46.** வளர்ந்த ஒருவரின் வாயிலுள்ள பற்களின் எண்ணிக்கை
1) 16 2) 32 3) 34

**47.** குழு விளையாட்டு அல்லாதது
1) கரப்பந்தாட்டம் 2) எல்லே 3) நீளம் பாய்தல்

**48.** வெசாக் திருவிழா கொண்டாடப்படும் மாதம்
1) ஏப்ரல் 2) மே 3) ஆகஸ்ட்

**49.** நற்பழக்கமாக அமையாதது
1) பாதணிகளை சுத்தமாக வைத்திருத்தல்
2) புத்தகங்களை சீராக வைத்திருத்தல்
3) கைவிரல் நகங்களை சீராக வெட்டாதிருத்தல்

**50.** இலங்கையின் மிக நீளமான ஆறு
1) களனி கங்கை 2) மகாவலி கங்கை 3) வளவ கங்கை

**51.** இலங்கை அரசாங்க இலச்சினையில் தார்மீகத்தை குறிப்பது
1) நிறைகுடம் 2) நெற்கதிர்கள் 3) தர்மசக்கரம்

**52.** கல் ஒன்றை இலகுவில் புரட்டுவதற்கு பயன்படுத்தத்தக்க உபகரணம்
1) இடுக்கி 2) அலவாங்கு 3) மரத்துண்டுத்தடி

**53.** இலங்கை தேசியக் கொடியில் தமிழ் மக்களைக் குறித்து நிற்பது
1) பச்சை நிறம் 2) மஞ்சள் நிறம் 3) செம்மஞ்சள் நிறம்

**54.** இலைகளின் கீழ்ப்புறம் முட்டை இடுவது
1) எறும்பு 2) நுளம்பு 3) வண்ணத்துப் பூச்சி

**55.** துப்புரவற்ற நீரை பருகுவதால் ஏற்படத்தக்க நோய்
1) மலேரியா 2) யானைக்கால் நோய் 3) செங்கண்மாரி

**56.** நாய் கடித்தால் முதலில் செய்யவேண்டியது
1) கைமருந்து கட்டுதல்
2) கடித்த இடத்தை சவர்க்காரம் இட்டு சுத்தமான நீரினால் கழுவுதல்
3) வைத்தியரிடம் கொண்டு செல்லல்

**57.** கம்பியை வெட்ட பயன்படுத்தும் உபகரணம்
1) இடுக்கி 2) சுத்தியல் 3) குறடு

**58.** சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக அறிவிக்க வேண்டிய தொலைபேசி எண் யாது?
1) 1990 2) 1929 3) 1919

**59.** அருகில் உள்ள ஓவியம் காணப்படுவது
1) சிகிரியா
2) சந்திரவட்டக்கல்
3) தலதா மாளிகை



**60.** பின்வருவனவற்றுள் யானைகள் சரணாலயம் எது?
1) பின்னவல 2) குமண 3) வில்பத்து

**61.** மிகச்சிறிய கோள் எது?
1) வெள்ளி 2) பூமி 3) புதன்

(1x30=30)

**62.** காலைக்காட்சி எனும் தலைப்பில் 3 வாக்கியங்கள் எழுதுக
(ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது 4 சொற்கள் இருத்தல் வேண்டும்)
1) ..................................................................
..................................................................
2) ..................................................................
..................................................................
3) ..................................................................
..................................................................

(2x3=6)

## பரீட்சை இலக்கம் 3 இன்

# பகுதி II இற்கான விடைகள்

01. (I) பின்னவல,கண்டி / கண்டி மாநகரம்
(II) (கண்கொள்ளாக் ) காட்சி
(III) நாங்கள் / சென்றோம்
(IB) சென்றோம்
(V) தங்கம் + கூரை
(VI) தேவலோகம்

02. அ. (I) வாழ்
(II) புடைவைக் (எழுதினால் மட்டும் புள்ளி வழங்கவும்)
ஆ. (I) ஐங்குரவர்
(II) அகராதி

03. கனைக்கும்

04. நிழலின் அருமை

05. பாபப் பலன்பரிநாசம் உயிர்

06 (I) தலைவி (II) குயத்தி (III) விருந்தினர்

07. நாம் அஞ்சல் நிலையத்தினால் பலவகையான நன்மைகளை அடைகிறோம்.
நான் அங்கு அபூர்வமான பிராணிகளைக் கண்டேன்.

08. (I) தம்பி! இங்கேவாரும். / தம்பி, இங்கே வாரும்.
(II) அம்மா,நான் பாடசாலைக்குச் செல்கின்றேன். / அம்மா! நான் பாடசாலைக்குச் செல்கின்றேன்.

09. (I) நாங்கள் கடற்கரையில் விளையாடினோம்.
(II) சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருப்போம்.

10. சந்தம், சாலை ,சிங்கம், சீட்டு, சுலபம், சூடம், செண்டு, சேதம், சைகை, சொத்து, சோறு, சௌக்கியம்.

11 (I) இது என்ன மரக்கறி
(II) மூன்று பழங்களின் பெயர்.

12 (I) Are you ready
(II) Squirrel

13 (I) லதா உள்ளே வாருங்கள்
(II) நான் தம்பி

14 (I) மலசலகூடம்
(II) விளையாட்டு மைதானம்.

15 (I)இருபத்தாறாயிரத்து முந்நூற்று பதினான்கு
(II) 3069

16 முன்னால் VIII பின்னால் X (VIII IX X) IX எழுதினால் தவறு.

17 381, 388

18 8 தடைவையில்

19 (I) 42
(II) 14

20 1344 பேர்

21 மு.ப 10.40

22. (I) ரூபாய் 450.00
(II) ரூ 2.00 ரூ 2.00 ரூ 1.00
(II) ரூபாய் 20.00

23. 6 மனிதர்கள்

24. 7 குளிர்பானப் போத்தல்கள்.

25. 108

26 3 வித்தியாசம்

27. 3 செங்கோணங்கள்

28 16m

29. (I) 13 இற்கு எல்லைப்படுத்தி நிறம் தீட்டவேண்டும்
(II) 7

| | | | |
|---|---|---|---|
| 30. | 2 | 45. | 1 |
| 31 | 3 | 46 | 1 |
| 32 | 2 | 47 | 1 |
| 33. | 1 | 48. | 3 |
| 34 | 2 | 49 | 2 |
| 35 | 3 | 50. | 1 |
| 36 | 2 | 51. | 2 |
| 37 | 1 | 52. | 3 |
| 38 | 3 | 53. | 2 |
| 39. | 2 | 54 | 2 |
| 40. | 3 | 55 | 3 |
| 41. | 1 | 56 | 2 |
| 42 | 3 | 57 | 3 |
| 43 | 2 | 58. | 1 |
| 44 | 2 | 59. | 3 |

60. பொருத்தமான 3 வாக்கியங்களுக்கு புள்ளி வழங்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'நெற்றிக்கண்' தெலுங்கு ரீமேக்கில் அனுஷ்கா?

மிலிந்த் ராவ் இயக்கத்தில் நயன்தாரா நடிப்பில் வெளியாகி உள்ள திரைப்படம் 'நெற்றிக்கண்'.
விக்னேஷ் சிவன் தயாரித்திருந்த இப்படம் கடந்த வாரம் நேரடியாக ஓடிடியில் வெளியாகி வரவேற்பைப் பெற்று வருகின்றது. இதில் நடிகை நயன்தாரா கண்பார்வையற்ற பெண்ணாக நடித்திருந்தார். அவரது நடிப்புக்கு பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன. இந்நிலையில், நெற்றிக்கண் படம் விரைவில் தெலுங்கில் ரீமேக் ஆக உள்ளது எனத் தகவல் வெளியாகி உள்ளது. தெலுங்கு ரீமேக்கில் அனுஷ்காவை நடிக்க வைக்க முயற்சி செய்யப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.



Nilojen Vijaykumar

மன்னா இரவில் எதற்காக ஊரடங்கு போட்டுள்ளீர்கள்...?

**மன்னர்:** கொரோனா எதனால் வந்தது வௌவாலால்...
**மன்னர்:** வௌவால் எப்போது வெளியில் வரும்.
இரவில்....
**மன்னர்:** வௌவாலை முடக்கி விட்டால் கொரோனாவை அடக்கி விடலாம்...






**அரசு:** அங்கர் தட்டுப்பாடு ஆகிடுச்சு இப்போ என்ன செய்விங்க....

**ரீ பிரியர்:** பிளேன் ரீ போட்டு குடிப்போம்.

**அரசு:** சீனி விலையை கூட்டிட்டோம் இப்போ என்ன செய்வீங்க..

**ரீ பிரியர்::** சீனி இல்லாம பிளேன் ரீ போட்டு சக்கரையோட குடிப்போம்.

**அரசு:** சுடுதண்ணி வைக்க காஸ் சிலிண்டர் இருக்காது இப்போ என்ன செய்வீங்க...




# பொறுமை



மூங்கிலைப் பயிரிட்டு தண்ணீர் ஊற்றுவார்கள். பருவங்கள் போகும். ஆனால், செடி வளரவே வளராது. ஒரு சென்ரிமீற்றர் அளவு கூட வளராமல் அடம்பிடித்து அப்படியே இருக்கும். முழுசாக நான்கு வருடங்கள் செடி அப்படியே இருக்கும். செடிக்குத் தண்ணீர் ஊற்றுபவர் பொறுமையுடன் அதை பராமரிக்க வேண்டும்.
நான்கு ஆண்டுகளாக அவருக்கு சிலாகிக்கவோ, மகிழ்ச்சி கொண்டாடவோ எதுவுமே இருப்பதில்லை.
ஆனால், அதற்கு அடுத்த பருவத்தில் எல்லோரும் வியக்கும் வண்ணம் அந்த மூங்கில் வளரத் தொடங்கும். அதுவும் எப்படி ? சட சடவெனும் அசுர வளர்ச்சி. *ஒரே ஆண்டில் அது எட்டிப் பிடிக்கும் உயரம் எவ்வளவு தெரியுமா ? 80 அடிகள். நான்கு ஆண்டு காலமாக அமைதியாக இருந்த செடி, எப்படி ஐந்தாவது ஆண்டில் மட்டும் விஸ்வரூப வளர்ச்சியை எட்டுகிறது ?
ஆராய்ந்து பார்த்தால் ஆச்சரியம் தரும் ஒரு ரகசியம் இதில் இருப்பதைப் புரிந்து கொள்ளலாம். இயற்கையின் அற்புதம் என்றோ, கடவுள் படைப்பின் மகத்துவம் என்றோ நீங்கள் பெயரிட்டுக் கொள்ளுங்கள்.
முதல் நான்கு ஆண்டுகள் அந்த மூங்கில் வேர்களை பூமியில் நன்றாக இறக்கி மிகச் சிறந்த பிடிமானத்தை உருவாக்கிக் கொள்கிறது. ஐந்தாவது ஆண்டில் நான் எண்பது அடி உயரமாக வளரப் போகிறேன், என்னைத் தாங்கிப் பிடிக்கும் வல்லமை என் வேர்களுக்குத் தேவை என அது முழு மூச்சாய்த் தன்னைத் தயாரிக்கும். அதனால் தான் ஐந்தாவது ஆண்டில் அசுர வளர்ச்சி அடையும் போது அது தடுமாறுவதும் இல்லை, தடம் புரள்வதும் இல்லை!
பொறுமை உயரமான வெற்றிகளை உருவாக்குகிறது. *அவசரப்பட்டு முளைத்து, சடசடவென வீழ்ந்து விடாமல், நமது அடித்தளத்தை வலுவாக்கிக் கொள்ள பொறுமை நம்மைத் தூண்டுகிறது.



# இன்றைய நாள்

**மேடம்:** சகிப்புத் தன்மை தேவை. தடைகள் தாண்டி முன்னேறுவீர்கள். யாரைப் பற்றியும் யாரிடமும் கேலி பேசி சிரமத்துக்குள்ளாக வேண்டாம். கடினமாக உழைத்துப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பீர்கள்.

**இடபம்:** முயற்சியில் இருந்த தடை நீங்கும். நிதானமான வெற்றி உண்டு. உங்களை வெறுத்தவர் வலிய வந்து உங்களின் உதவியை பெறுவார். உழைப்பால் உயர்வீர்கள்.

**மிதுனம்:** பிரிந்தவர் ஒன்றுசேர வாய்ப்புண்டு. உங்களின் செயற்றிறன் கூடும். பிரிந்த குடும்பத்தை ஒன்று சேர்க்க முயற்சி செய்வீர்கள். புகழும், பாராட்டும் தாமதமாகக்கூடும்.

**கடகம்:** சிறு பிரச்சினைகள் பெரியவர்களின் தலையீட்டால் தீரும். அதிகமாக உழைப்பீர்கள். முன்னேற்றத்திற்கான புதுப்பாதை தெரியும். குடும் பத்தில் குழப்பங்கள் நீங்கி அமைதி திரும்பும்.

**சிம்மம்:** தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கக்கூடும். பணியாளர்கள் நிதிப் பிரச்னைகளுக்கு நல்ல தீர்வு காண்பீர்கள் முயற்சிகளுக்கு முழுமையான பலன் எதிர்பார்க்காதீர்கள்.

**கன்னி:** மூத்த சகோதரர்களால் ஏற்பட்ட சிரமங்கள் நீங்கும். வெளிநாட்டில் வேலைக்கு முயற்சிப்பவர்களுக்கு நன்மை உண்டாகும். மகிழ்வான நாள். எதிலும் சற்று விலகி நிற்பது நல்லது.

**துலாம்:** தந்தையின் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. பண வரவு சற்று தாமதமாகும். வாகனம் வாங்கும் எண்ணம் வரும். மன நிம்மதி மீளும்.

**விருச்சிகம்:** நண்பர்களால் சங்கடமும் பிறகு நன்மையும் உண்டாகும். பெரிய விஷயங்களை நன்கு யோசித்த பிறகே முடிவு எடுங்கள். சொத்துக்கள் வாங்குவீர்கள்.

**தனுசு:** மற்றவர்களால் விமர்சிக்கப்பட்டால் கவலை வேண்டாம். இளைய சகோதர, சகோதரிகள் மூலம் உதவி கிடைக்கும். பெரியோரின் தலையீடு சிரமத்திலிருந்து விடுபட வழிகாட்டும்.

**மகரம்:** எதையும் நிதானித்துச் செய்தால் நன்மை அடைவீர்கள். பயம் விலகும். குடும்ப வாழ்க்கை இனிமையாக மாறும். தன்னம்பிக்கை குறையாமல் இருந்தால் சாதனை நிகழும்.

**கும்பம்:** மற்றவர்களால் விமர்சிக்கப்பட்டால் கவலை வேண்டாம். இளைய சகோதர, சகோதரிகள் மூலம் உதவி கிடைக்கும்.சிரமத்திலிருந்து விடுபட வழிகாட்டும்.

**மீனம்:** குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் முடிவுக்கு வரும். ஆரோக்கியத்தில் சிறிய தொல்லை ஏற்பட்டு இன்றே குணமாகும். கவனத்துடன் செயற்படுவது நல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானை கட்டமைப்பது எமது நோக்கமல்ல அமெரிக்கர்களை பாதுகாப்பது மாத்திரமே இலக்கு

## தலிபான்கள் வசம் ஆப்கான் வீழ்ந்துள்ள நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் விசேட உரை



**நியூயோர்க், ஓக. 18**

**ஆப்கான் ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறிவிட்டார். ஆப்கான் அரசும், படையும் தலிபானை எதிர்க்காத போது நாம் ஏன் அவர்களை எதிர்க்க வேண்டும்? ஆப்கான் படைகளே தங்கள் நாட்டை காக்காதபோது, அப்படி ஓர் போரை நடத்த வேண்டிய அவசியம் அமெரிக்க படைகளுக்கு கிடையாது. அந்தப் போரில் உயிரிழக்க வேண்டிய அவசியம் அமெரிக்கப் படைகளுக்கு கிடையாது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் விசேட உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை 1.30 மணியளவில் ஆப்கான் விவகாரம் தொடர்பில் அவர் தனது விசேட உரையில் முக்கியமாகத் தெரிவித்ததாவது:

ஆப்கானிஸ்தானில் வாழ்நாள் முழுக்க அமெரிக்க படைகள் போர் செய்து கொண்டு இருக்க முடியாது, என்னோடு இந்த போர் முடிவுக்கு வரட்டும், இனியும் ஆப்கானிஸ்தானில் நாம் போராட வேண்டிய அவசியம் கிடையாது. நான் என்னுடைய முடிவில் உறுதியாக இருக்கிறேன்.

ஆப்கானிஸ்தானில் நடக்கும் விடயங்களை பாதுகாப்புத்துறை அதிகாரிகளுடன் இணைந்து தீவிரமாக கண்காணித்து வருகிறேன். நாங்கள் ஆப்கானிஸ்தான் நாட்டை கட்டமைக்க வேண்டும் என்று அங்கு செல்லவில்லை. அது எங்கள் பணியல்ல. ஆப்கானிஸ்தானுக்கு முக்கியமான சில குறிக்கோளுடன் சென்றோம். அல் கொய்தாவை முறியடிக்கவும், ஒசாமாவை பிடிக்கவும் இந்த போர் தொடுப்பு நடத்தப்பட்டது. ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகளை வாபஸ் வாங்க எதுவும் தகுந்த நேரம் கிடையாது.

எப்போது படைகளை வாபஸ் வாங்கினாலும் இதே நிலைதான். 5 வருடங்களுக்கு முன் வாபஸ் வாங்கினாலும் இப்படித்தான் நடந்து இருக்கும். 15 வருடங்களுக்கு பின் வாபஸ் வாங்கினாலும் இப்படித்தான் நடந்து இருக்கும். ஆப்கானிஸ்தானில் நினைத்ததை விட வேகமாக மாற்றம் நடந்துவிட்டது. ஆப்கான் படைகள் தோல்வி அடைந்துவிட்டன.

ஆப்கானிஸ்தானை ஒற்றுமைப்படுத்த எத்தனை ஆண்டுகள், எவ்வளவு படைகள் முயன்றாலும் முடியாது. தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கை மட்டுமே எங்களின் குறிக்கோள். ஆப்கானிஸ்தானில் நடந்து வரும் விடயங்களை கவனித்து வருகிறோம். ஆப்கானிஸ்தானில் இருக்கும் அமெரிக்கர்களை வெளியேற்றி வருகிறோம். அமெரிக்கர்களை காப்பது மட்டுமே என் நோக்கம். அமெரிக்காவின் பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்பட்டால் அமெரிக்க படை உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

நான் ஜனாதிபதியாகப் பதவி ஏற்கும் முன்பே முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் தலிபான்களுடன் உடன்படிக்கையை மேற்கொண்டு 15 ஆயிரம் படைகள் வரை மீளப் பெறப்பட்டுவிட்டன. அந்த ஒப்பந்தத்தை நான் தொடர்ந்து மேற்கொண்டேன். நான் என்னுடைய முடிவில் உறுதியாக இருக்கிறேன். நாங்கள் எடுத்தது ரிஸ்க்தான். ஆனால் ஆப்கான் படைகள் நினைத்ததைவிட வேகமாக வீழ்ந்துவிட்டன.

20 வருடமாக போர் நடக்கிறது. இந்த போரை எதிர்கொள்ளும் நான்காவது ஜனாதிபதி நான். இதே போரை நான் இன்னொரு ஜனாதிபதிக்கு கடத்தி செல்ல மாட்டேன். நான்தான் இப்போது ஜனாதிபதி. என்னோடு இந்த போர் முடியட்டும். முந்தைய ஜனாதிபதிகள் செய்த தவறை நானும் செய்ய மாட்டேன்.

எனக்கு இது வருத்தம் தருகிறது. ஒசாமா பின் லேடனை கொன்றதோடு அமெரிக்காவின் பணி முடிந்துவிட்டது. ஆப்கானிஸ்தானை மாற்றுவது நம் வேலை இல்லை. ஆப்கானிஸ்தானில் வாழ்நாள் முழுக்க போர் செய்ய முடியாது. இது நம்முடைய வேலை இல்லை. இது நம்முடைய தேசிய பாதுகாப்பு பிரச்சினையும் இல்லை. இதில் எப்போதும் கவனம் செலுத்த முடியாது. அமெரிக்க வீரர்கள் குடும்பத்தை விட்டுவிட்டு ஆப்கானிஸ்தானில் உயிரை கொடுத்து போராட முடியாது. நான் நம் நாட்டு வீரர்களிடம் அதை கேட்க மாட்டேன். என்னை நீங்கள் விமர்சனம் செய்யலாம். ஆனால், இதுதான் நாட்டுக்கும் நம் பாதுகாவலர்களுக்கும் நல்லது.

ஆப்கான் படைகள் அந்த நாட்டை காக்காதபோது, நாம் ஏன் ஆப்கானிஸ்தானில் போர் புரிய வேண்டும்? இதற்காக பல டிரில்லியன் நாம் செலவு செய்து இருக்கிறோம், அவர்களுக்கு பயிற்சி கொடுத்து இருக்கிறோம், அவர்கள் கேட்டது எல்லாம் கொடுத்தோம். ஆனால் அவர்களே தலிபான்களிடம் சரண் அடைந்த போது நாம் ஏன் அவர்களுக்காக போராட வேண்டும்? என்று அமெரிக்க ஜனாதிபதி பைடன் தன்னுடைய உரையில் குறிப்பிட்டுள்ளார். (ஒ.இ)

**புகலிடம்**



கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இருந்து கட்டாருக்குச் சென்ற அமெரிக்க விமானப்படையின் சி - 17 விமானத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் குழுமியிருக்கும் இந்த ஒளிப்படம் சமூக வலைதளங்களில் வைரலானது.

பொதுவாக ஏறக்குறைய 150 இராணுவ வீரர்களை சுமந்து செல்லும் இந்த விமானத்தில், தாலிபன்களால் ஏற்பட்டுள்ள, அச்சுறுத்தலால் சுமார் 640 பேர் பயணித்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ.இ)

# ஆப்கானியர்களுக்கு பிரான்ஸ் புகலிடம் வழங்கத் தயாரில்லை

## அந்த நாட்டு அதிபரின் உரையில் தெரிவிப்பு

பாரிஸ், ஓக. 18

ஆப்கானிஸ்தான் முன்னர்போன்று பயங்கரவாதத்தின் 'சொர்க்கமாக' 'சரணாலயமாக' மீண்டும் மாறிவிடக் கூடாது. அதை அனுமதிக்கமுடியாது என்று நாட்டுக்கு ஆற்றிய விசேட தொலைக்காட்சி உரையில் அந்த நாட்டு அதிபர் இமானுவல் மக்ரோன் தெரிவித்திருக்கிறார்.

பிரான்ஸின் சொந்தப் பாதுகாப்புக்கும் பொது எதிரியான பயங்கரவாதத்துக்கு எதிரான போருக்கும் ஆப்கானிஸ்தான் ஒரு முக்கிய சவாலாக மாறியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். 'இஸ்லாமியப் பயங்கரவாதத்துக்கு எதிராக எல்லா வடிவங்களிலும் போராடுவதே எங்களது நடவடிக்கைகள் அனைத்துக்கும் மேலான முன்னுரிமையான செயற்பாடாக இருக்கவேண்டும்' என்று அவர் கேட்டுக் கொண்டார்.

ஆப்கானிஸ்தான் நிலவரம் தொடர்பாகவும் அங்குள்ள பிரெஞ்சுப் பிரஜைகளை மீட்கும் நடவடிக்கை குறித்தும் நாட்டு மக்களுக்கு நேற்றிரவு அவர் தனது விடுமுறைக்கால வதிவிடத்தில் இருந்தவாறு உரையாற்றினார்.

சர்வதேச ஸ்திரத்தன்மைக்குச் சவாலான இந்த விவகாரத்தில் ஒரேவிதமான நலன்களைக் கொண்ட ரஷ்யா, அமெரிக்கா, ஐரோப்பா மட்டத்தில் ஒருங்கிணைந்து நடவடிக்கைகளை எடுப்பதற்கு இயன்ற அனைத்தையும் செய்வோம் என்று தெரிவித்த மக்ரோன், ஆப்கானிஸ்தானில் இருந்து அடுத்துவரும் நாட்களில் எதிர்பார்க்கப்படுகின்ற குடியேறிகளது பெரும் படையெடுப்பைத் தடுக்கவும், சட்டவிரோதமாக ஆள்களைக் கடத்துகின்ற சக்திகளை ஒடுக்கவும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் ஒருங்கிணைந்து திட்டங்கள் வகுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

குடியேறிகளோடு சேர்ந்து இஸ்லாமியத் தீவிரவாதிகளும் ஐரோப்பிய எல்லைகளுக்குள் ஊடுருவுவது தடுக்கப்படும் என்ற செய்தியைத் தனது உரையில் அவர் கோடிகாட்டினார்.

ஆப்கானிஸ்தானில் நேசப் நாடுகளுடன் நிலைகொண்டிருந்த பிரெஞ்சுத் துருப்பினர், அமெரிக்கா அங்கிருந்து வெளியேறுவதற்கு முன்பாகவே 2014 ஆம் ஆண்டில் திருப்பி அழைக்கப்பட்டிருந்தனர். 2001 முதல் 2014 ஆம் ஆண்டுவரையான 13 ஆண்டுகாலப் பகுதியில் அங்கு தலிபான்களுக்கு எதிரான போரில் பிரெஞ்சுப்படையினர் 90 பேர் உயிரிழந்தனர். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கான் நிலைமைகளை அவதானிக்கும் இந்தியா!



**புதுடில்லி, ஒக.18**
**ஆப்கானிஸ்தானில் உள்ள நிலைமையை இந்தியா தொடர்ந்து கண்காணித்து வருகின்றது என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தகவல் வெளியிட்டுள்ளது.**

ஆப்கானிஸ்தானில் உள்ள இந்தியர்களுடன் தொடர்ந்து தொடர்புகள் பேணப்படுகின்றன என்றும்- இந்திய மத்திய அரசு கூறியுள்ளது.
இந்தியத் தூதரக அதிகாரிகள் மற்றும் குடும்பத்தினரை மீட்பதற்காக சி-17 என்ற விமானம் காபூலில் தரையிறங்கியுள்ளது. 500க்கும் மேற்பட்ட இந்தியர்கள் காபூலில் சிக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தநிலையில், இந்தியக் குடிமக்களின் பாதுகாப்புக்காக அவ்வவ்போது அறிவுரைகளை வழங்கப்பட்டு வருகின்றது என்று இந்தியத் தரப்பில் கூறப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானின் காபூல் நகரத்தை தலிபான்கள் கைப்பற்றியுள்ள நிலையில் ,அங்குள்ள தங்கள் நாட்டு பிரஜைகளை மீட்க ஒவ்வொரு நாடுகளும் முயற்சித்து வருகின்றன. (எ-இ)

# இந்தியாவின் முதலீடுகள் ஆப்கானில் கேள்விக்குறி

புதுடில்லி, ஒக.18
ஆப்கானிஸ்தானின் காபூல் நகரத்தை தலிபான்கள் கைப்பற்றியுள்ள நிலையில், இந்தியா அந்தநாட்டில் மேற்கொண்டுள்ள முதலீடுகள் கேள்விக்குறியாகியுள்ளன. 2001 ஆம் ஆண்டில் தலிபான்கள் ஆட்சி வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானுடனான உறவை இந்திய அரசு தொடர்ந்து வலுப்படுத்தி வந்தது. அந்த நாட்டில் ஏராளமான முதலீடுகளை இந்திய அரசு மேற்கொண்டுள்ளது. அணைகள், சாலைகள், பாட சாலைகள் உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்பு வசதிகளை இந்திய அரசு ஏற்படுத்தியுள்ளது. நாடாளுமன்றம், கிரிக்கெட் விளையாட்டு மைதானம் ஆகியவையும் இந்திய அரசின் உதவியுடன் அமைக்கப்பட்டன. அதேநேரம் ஆப்கானிஸ்தானுடன் எளிதில் தொடர்புகொள்ளும் வகையில் ஈரானில் சாப்ஹர் துறைமுகத்தையும் இந்திய அரசு கட்டமைத்து வந்தது.
தற்போது ஆப்கானின் ஆட்சியதிகாரத்தை தலிபான்கள் கைப்பற்றியுள்ள நிலையில், இந்திய அரசு மேற்கொண்டுள்ள முதலீடுகள் கேள்விக்குறியாகியுள்ளன என்று பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

# சிவசங்கர் பாபாவின் பிணை மனு நிராகரிப்பு

சென்னை, ஒக.18
பாலியல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள சிவசங்கர் பாபாவின் இரண்டு பிணை மனுக்களையும் இந்திய உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.
தமிழ்நாட்டின், செங்கல்பட்டு மாவட்டம் கேளம்பாக்கம் அடுத்த புதுப்பாக்கத்தில் இயங்கி வந்த சுசில் ஹரி இன்டர்நஷனல் கல்லூரியின் நிறுவுநர் சிவசங்கர் பாபா மீது பாலியல் குற்றசாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டன. அந்தக் கல்லூரியின் முன்னாள் மாணவிகள் இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். அவற்றை விசாரித்த சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் அவர் மீது மூன்று போக்சோ வழக்குகள் பதிவு செய்துள்ளனர். தற்போது சிவசங்கர் பாபா கைது செய்யப்பட்டு செங்கல்பட்டு போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.
சிவசங்கர் பாபாவின் இரண்டு பிணை மனுக்கள் முன்னர் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், அவர் உயர் நீதிமன்றத்தை நாடியிருந்தார். அதில், தனது உடல்நிலை தொடர்பான தகவல்களைத் தெரிவித்து, தனக்குப் பிணை வழங்கக் கோரியிருந்தார். ஆனால் உயர் நீதிமன்றமும் அவருடைய பிணை மனுக்களை தள்ளுபடி செய்திருக்கிறது.
அதேவேளை, இவர் மீது 600 பக்கங்கள் கொண்ட குற்றப் பத்திரிகை செங்கல்பட்டு சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (எ-இ)





# பொகாஸஸ் செயலி உளவு மறுக்கிறது மத்திய அரசு!

புதுடில்லி, ஒக.18
பெகாஸஸ் செயலி மூலம் உளவு பார்க்கப்பட்டது என்று கூறப்படும் முறைப்பாடுகள் அடிப்படை ஆதாரம் அற்றவை என இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது. உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு பக்க பதில் மனுவிலேயே இந்திய மத்திய அரசு இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.
இருப்பினும் தவறான கருத்துக்களைக் களைய நிபுணர் குழுவை நியமித்து விசாரணை நடத்தப்படவுள்ளது என்றும் அந்த மனுவில் தெரிவித்துள்ளது.
இந்த வழக்கை விசாரணை செய்த தலைமை நீதிபதி ரமணா தலைமையிலான மூன்று நீதியரசர்கள் கொண்ட குழுவினர் பெகாஸஸ் செயலி குறித்த விரிவான விசாரணை அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளனர். (எ-இ)



# கணவனுக்கு கோயில் கட்டி தினமும் வழிபடும் மனைவி

சென்னை, ஒக.18
ஆந்திராவில் தனது கணவனுக்காக கோவில் கட்டி பூசை செய்யும் மனைவி பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன.
ஆந்திர மாநிலம் பிரகாசம் மாவட்டத்தில் பத்மாவதி வசிக்கிறார். இவரது கணவர் அங்கி ரெட்டி 4 வருடங்களுக்கு முன்பு நடந்த கார் விபத்தில் உயிரிழந்துள்ளார். கணவருக்கு பின் விவசாய பணிகளை அவரது மகன் மேற்கொண்டு வந்துள்ளார்.
பத்மாவதியின் கனவில் வந்த அவரது கணவர், தனக்கு கோவில் கட்டச் சொன்னார் என்று கூறப்படுகிறது. இதனால் அவரது மகன், தங்களது விவசாய நிலத்தருகே தந்தையின் சிலையை வைத்து கோவிலை கட்டியுள்ளார்.
பத்மாவதி, தினமும் கோவிலில் உள்ள தனது கணவரின் சிலைக்கு பூஜைகள் செய்து வழிபாடு செய்து வருகின்றார். தனது கணவரின் பிறந்த நாள், நினைவு நாள் மற்றும் பௌர்ணமி ஆகிய தினங்களில் ஏழை எளியவர்களுக்கு அன்ன தானமும் வழங்குகிறாராம். (எ-இ)

# குடியரசுத் தலைவரின் முடிவுக்காக காத்திருக்கும் எழுவர் விடுதலை!

சென்னை, ஒக.18
7 பேர் விடுதலை தொடர்பான விவகாரத்தில் இந்தியக் குடியரசுத் தலைவரின் முடிவுக்காகக் காத்திருக்கிறோம் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது
தமிழக சட்டமன்றத்தில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் இருக்கும் 7 பேரை விடுதலை செய்வது தொடர்பான சட்டம் நிறைவேற்றப்பட்டு ,ஆளுநரின் ஒப்புதலுக்காக காத்திருப்பில் உள்ளது. இது தொடர்பாக விரைவில் முடிவெடுக்க கோரி மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் இல்லை.
விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையைச் சேர்ந்தவர் ரவிச்சந்திரன். இவரும் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மதுரை மத்திய சிறையில் 29 ஆண்டுகளாக ஆயுள் தண்டனை அனுபவித்து வருகிறார். தன்னை விடுவிக்க வேண்டும் என்று இவர் மனுத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனு நீதிபதிகள் பாரதிதாசன், நிஷா பானு அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு தரப்பில் முன்னிலையான வழக்கறிஞர், 7 பேர் விடுதலை தொடர்பான விவகாரத்தில் குடியரசு தலைவரின் முடிவுக்காக காத்திருக்கிறோம் என்று குறிப்பிட்டார். அதையடுத்து நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், 'இந்த விவகாரத்தில் நீதிமன்றம் எத்தகைய முடிவையும் எடுக்க இயலாது. குடியரசுத் தலைவரின் முடிவு மனுதாரரின் கோரிக்கைக்கு எதிராக அமைந்தது என்றால் அப்போது மனுதாரர் வழக்கு தொடர்ந்து நீதிமன்றத்தை நாடலாம். இந்த வழக்கை 2 வாரங்களுக்கு ஒத்திவைக்கிறோம் என்று தெரிவித்தனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய் அறிகுறிகள் தென்படின் உடன் பரிசோதனை செய்யவும்

## சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்து

**கொடிகாமம், ஓக. 18**

**"நோய் அறிகுறிகளின் அடிப்படையில் அது கொவிட் தொற்றாக இருக்கலாம் என்று சந்தேகம் வந்தபின்பு உரிய பரிசோதனைகளை மேற்கொள்ளாமல் அவற்றை மறைத்தவாறு வெளியில் நடமாடி அதனை பலருக்கும் பரப்பிவிடுகின்ற மோசமான செயலை தொடர்ந்து செய்யாதீர்கள்" என்று சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தீவிர நோய்நிலைமை இல்லாத கொவிட் தொற்றாளர்கள் அனைவரையும் இன்று (நேற்று) முதல் வீட்டில் தனிமைப்படுத்தி கண்காணிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே எவ்வித தயக்கமும் இன்றி உங்களை உடனுக்குடன் பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ள முன்வாருங்கள்.

ஒன்று பத்தாகி, அது நூறாகும் நிலை ஏற்படின் குறித்த பிரதேசமே காலவரையறை இன்றி முடக்கப்பட்டு இயல்பு வாழ்க்கையே முடங்கிப்போகும் ஆபத்து ஏற்படலாம்.

எனவே நோய் அறிகுறி ஏற்படின் செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் இடம்பெறும் பரிசோதனை முகாமில் கலந்து கொள்ளுங்கள் -என்றனர். (ஐ-159)

# பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் கொள்ளையர் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 18

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் திஸ்ஸமஹாராம - சூரியவெள பிரதேசத்தில் பொலிஸார் நேற்று நடத்திய துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

பெண்ணொருவரின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை பறித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றவர்கள் மீதே இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மோட்டார் சைக்கிளில் வந்த குறித்த நபர்கள், சூரியவெள பகுதியில் நேற்று மாலை வீதியில் பயணித்த பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியை பறித்துக்கொண்டு தப்பிச் செல்வது தொடர்பாக தகவல் அறிந்த பொலிஸார் சந்தேகநபர் . ளை ஜீப் வாகனத்தில் துரத்திச் சென்றுள்ளனர். இதன்போது கொள்ளையர்கள் பொலிஸ் வாகனத்தை நோக்கி துப்பாக்கிச்சூட்டை நடத்தினர் எனவும், இதன்போது பதிலுக்குப் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் அந்த நபர்கள் இருவரும் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இந்தச் சம்பவத்தின்போது குறித்த பொலிஸ் ஜீப் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகில் மரமொன்றில் மோதி விபத்துக்குள்ளானத்தில் பொலிஸார் சிலர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் சூரியவெள பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ம-22)


## கண்ணீர் அஞ்சலி

யாழ் மாவட்ட செயலகத்தில் மனித வலு வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி சுஜேந்தினி ஸ்ரீகௌரிதாசன் அவர்களின்அன்புத் தந்தை

**நீலன் முருகேசு**

16.08.2021 ஆம் திகதி இறைபதம் அடைந்து விட்டார் அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியினைக் காணிக்கையாக்குவதுடன், அவரின் குடும்பத்தினருக்கு எமது திணைக்கள உத்தியோகத்தர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ் மாவட்ட மனிதவள அபிவிருத்தி உதவியாளர்கள் / அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்


# இலங்கையில் இதுவரை 31 நகரங்கள் சுயமுடக்கம்

கொழும்பு, ஓக. 18

இலங்கையில் கொரோனாத் தொற்று நோய் வேகமாகப் பரவி வருவதால், கடை உரிமையாளர்கள் மற்றும் நகர வர்த்தக சங்கங்கள் நேற்றுத் தாமாக முன்வந்து 15 நகரங்களில் உள்ள கடைகளை மூடுவதற்கு முடிவு செய்துள்ளன.

திருகோணமலை நகர சபை மற்றும் பிரதேச சபை பகுதிகள், கேகாலை, சிலாபம், அம்பாறை, வென்னப்புவ, கெக்கிராவ, மொனராகலை, திவுலபிட்டிய, தெரணியாகல, உரகஸ்மன்ஹந்திய, வாதுவ, பாந்துராகொட, ரிக்கிலகஸ்கட மற்றும் அலவிவ ,யாழ்ப்பாணம், கொடிகாமம் சந்தைத் தொகுதி ஆகியன இவ்வாறு மூடுவதற்கு முன்வந்துள்ளன.

இவற்றில் சில நகரங்களில் உள்ள வணிகர்கள் ஒரு வாரத்துக்கும், மற்ற நகரங்களில் இரண்டு வாரங்களுக்கும் வேறு சில நகரங்களில் மறு அறிவித்தல் வரையும் மூடுவதற்கு முடிவு செய்துள்ளனர். நாடு முழுவதும் ஏற்கனவே 16 நகரங்களில் உள்ள கடைகள் மூடப்பட்டுள்ள நிலையில் நேற்றுடன் இவ்வாறு மூடப்படும் நகரங்களின் மொத்த எண்ணிக்கை 31ஆக அதிகரித்துள்ளது. தங்கள் நகரங்களில் கொரோனா பரவும் அபாயம் இருப்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டது எனத் வர்த்தக சங்கங்கள் தெரிவித்துள்ளன. (ம-22)


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் கல்வியியலாளர்

**திருமதி.சுதர்சினி விக்னமோகன்**

அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி சரஸ்வதி செல்லப்பா**

**(ஓய்வு நிலை ஆசிரியை)**

நேற்று முன்தினம் (16.08.2021) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னாரின் பிரிவில் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரிச் சமூகம்**


# கொரோனா தற்காலிக ஏற்பாடுகள் சட்டவரைபு சபையில் நிறைவேற்றம்

கொழும்பு, ஓக. 18

திருத்தங்களுடன் கூடிய கொரோனா தற்காலிக ஏற்பாடுகள் (2019) சட்டவரைபு நேற்று பிற்பகல் வாக்கெடுப்பு இல்லாமல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டவரைபு மீதான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இதன்போது 20க்கும் மேற்பட்ட ஆளும் மற்றும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தமது வாதங்களை முன்வைத்திருந்தனர். இதற்கான பிரேரணையை ஜனாதிபதி சட்டத்தரணி நீதி அமைச்சர் அலி சப்ரி முன்வைத்தார்.

கொரோனாத் தொற்று நோயை எதிர்கொள்ளும்போது நீதித்துறையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை இயல்பாக்குவதற்கும், இணையத்தின் ஊடாக நடத்தப்படுவதற்கும், பராமரிப்பதற்கான வசதிகளை வழங்குவதற்கும், தேவையான சட்ட விதிகளை இந்தச் சட்டவரைபு வழங்கும் என்று நீதி அமைச்சர் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார். (ம-22)


## மரண அறிவித்தல்



**திருமதி கனகரெட்ணம் நாகலட்சுமி**

மண்டைதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகரெட்ணம் நாகலட்சுமி அவர்கள் (17.08.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை சின்னம்மா தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான வீரமுத்து செல்லம் அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகரெட்ணம் அவர்களின் பாசமிகு துணைவியாரும், காந்திமதி, காலஞ்சென்ற யோகரெட்ணம் மற்றும் கலைநேசன் ஆகியோரின் அன்பு தாயாரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா சண்முகராஜா மற்றும் பவளம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம், நீலாவதி, தர்மலிங்கம், குணமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2021) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு தலைக்கிரி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**



## கண்ணீர் அஞ்சலி



**மண்ணில் 21.05.1947** | **விண்ணில் 17.08.2021**

**மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் மகப்பேற்று மற்றும் பெண்ணோயியல் வைத்திய நிபுணர் ந. சரவணபவா** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி நமசிவாயம் அம்பிகாவதி**

அவர்கள் 17.08.2021 அன்று இறைபதம் அடைந்தமையறிந்து வைத்தியசாலை சமூகம் ஆழ்ந்த கவலையடைந்துள்ளனர். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்

**தலைவர், பணிப்பாளர் சபை, ஊழியர்கள்,**

**மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிகாட்டுவோம்





## நிலா

1. பூமியில் இருந்து ஆண்டுதோறும் சுமார் 1.5 அங்குலம் தூரம் நிலா விலகிச் சென்று கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.
2. அடுத்த 6 ஆண்டுகளுக்குள் நிலவில் பயிர் களை விளைவிக்கஅமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாஸா திட்டமிட்டுள்ளது.
3. கடல் அலைகளின் வேகம் குறைவதற்கும், அதிகரிப்பதற்கும் நிலவின் ஈர்ப்பு சக்தி முக்கிய காரணமாக உள்ளதாகக் கூறப்படுகிறது.
4. நிலவுக்கும் பூமிக்கும் இடையிலான தூரம் 238,857 மைல்களாக(384,403 கிலோ மீற்றர்கள்) கணக்கிடப்பட்டுள்ளது.
5. நிலவைவிட உருவத்தில் 400 மடங்கு பெரிய தாக சூரியன் உள்ளது.
6. பூமியில் உள்ள புவியீர்ப்பு சக்தியில் ஆறில் ஒரு பங்குதான் நிலவில் உள்ளது.
7. நிலவுக்கு காரில் செல்வதாக இருந்தால், மணிக்கு 80 மைல் வேகத்தில் அதை ஓட்டிச் சென்றால் 4 மாதங்களில் நிலவை அடைய லாம்.
8. 70 விண்கலங்கள், பழைய காலணிகள், மனி தக் கழிவுகள் உட்பட நிலவில் மனிதர்களால் 200 டன் குப்பைகள் போடப்பட்டுள்ளன.
9. உலகின் முதல் மனிதராக 1969ஆம் ஆண்டில் நீல் ஆம்ஸ்ரோங் நிலவில் காலடி எடுத்துவைத் தார். இதைத்தொடர்ந்து இதுவரை 12 விண் வெளி வீரர்கள் நிலவுக்குச் சென்றுள்ளனர்.





## சிறுவனின் புத்திசாலித்தனம்

ஒரு நாள் ஒரு சிறுவன் தன் அம்மாவுடன் கடைக்கு போனான். அந்த கடைக்காரர் பையன் அழகாக இருக்கி றான் என்று சொல்லிவிட்டு போத்தலில் உள்ள இனிப்புக் களை காட்டி "எவ்வளவு வேணுமோ எடுத்துக்கோ" என்றார். ஆனால் அந்த பையன் எடுக்கவே இல்லை. கடைக்காரர் எவ்வளவோ வற்புறுத்தியும் அவன் எடுக்கவில்லை. அதை பார்த்த அவன் அம்மா "இனிப்பு போத்தலில் இருந்து எடுத் துக் கொள்" என்றார் அப்பவும் அவன் இனிப்புக்களை எடுக்கவே இல்லை.

பிறகு அந்த கடைக்காரரே இனிப்புக்களை எடுத்து அவன் கைகளில் கொடுத்தார். அவன் ஆசையுடன் இரண்டு கைக ளாலும் வாங்கி கொண்டான்.

வீட்டுக்கு போனவுடன் அவன் அம்மா "ஏன் போத்தலில் இருந்து நீயே எடுத்துக் கொள்ளவில்லை" என்று கேட்டார்.

"அம்மா என் கையை பாருங்கள் எவ்வளவு சின்னதாக இருக்கிறது. நானே எடுத்து இருந்தால் எனக்கு கொஞ்சமா கத்தான் கிடைத்திருக்கும்.

இப்ப பாருங்கள் அவர் எடுத்துக் கொடுத்ததால் எவ்வளவு அதிகமாக இனிப்புக்கள் கிடைத்துள்ளது" என்றான்.

**எதையுமே நாமாக நாடிச் சென்றால் குறைவாகத் தான் கிடைக்கும். அதுவே தேடிவந்தால் அதிகமாகக் கிடைக்கும்..**

## இலவசக் கல்வியின் தந்தை

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கீழிருந்த இலங்கையில் பிறந்து 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை யும் வாழ்ந்தவர் கலாநிதி சி.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர.

அவர் ஆற்றிய பணிகளின் காரணமாக இந் நாட்டின் இலவசக் கல்வியின் தந்தையாக நோக் கப்படுகின்றார்.

அதேநேரம் உலகில் அதிக எழுத்தறிவு வீதம் கொண்டவர்கள் வாழும் நாடு என்ற பெரு மையை இந்நாட்டுக்குப் பெற்றுக் கொடுத்த பெருமையும் அவரையே சாரும்.

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பக் காலப்பகுதி வரையும் செல்வந்தர்களுக்கும், மேட்டுக்குடியி னருக்கும் மாத்திரம் உரியதாக இருந்த கல்வி வாய்ப்பை இந்நாட்டிலுள்ள ஏழை, எளிய மக்க ளும் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதி வாய்ப் பைப் பெற்றுக்கொடுத்தவராவார்.

கிறிஸ்தோபர் வில்லியம் விஜேகோன் கன்னங் கர. 1884 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி காலி மாவட்டத்திலுள்ள பலப்பிட்டிய, ரன்டம்பே என்ற இடத்தில் பிறந்தார்.



## பொது அறிவு



உல்கின் மிகப் பெரிய விலங்கு எது?
திமிங்கிலம்

உலகிலேயே மிக நீளமான நதி எது?
அமேசன்

உலகிலேயே பெரிய பாலைவனம்?
சஹாரா பாலைவனம்

உலகிலேயே மிகச் சிறிய அரசு?
வத்திக்கான்

உலகிலேயே பெரிய சமுத்திரம்?
பசுபிக் சமுத்திரம்

உலகிலேயே பெரிய தீவு?
கிறீன்லாந்து

உலகிலேயே பெரிய கண்டம்?
ஆசிரியாக் கண்டம்

உலகிலேயே சிறிய கண்டம்?
ஆஸ்திரேலியா

அதிக எரிமலைகள் உள்ள நாடு
இந்தோனேஷியா



## ஆங்கிலம் கற்போம்



பச்சை மிளகாய்
Green Chilli
கிரின் சில்லி



தக்காளி
Tomato
ரொமட்டோ



விமானம்
Airplane
ஏரோபிளேன்



வெங்காயம்
Onion
ஒனியன்



வாழைப்பழம்
Banana
பனானா



புகையிரதம்
Train
ரெயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை நலன் பாராட்டு

யாழ் போதனா வைத்தியசாலையில் 37 வருடங்களாக தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றி இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்லும்

**திருமதி ம.யூ.ஸ்ரனிஸ்லஸ்**



அவர்களது சேவையை பாராட்டுவதோடு ஓய்வு காலத்தில் சீரும் சிறப்பு மாக பல்லாண்டு காலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துக்கள்

**தாதிய நலன்புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**



## தவறிவிட்டது

நேற்று (17.08.2021) செவ்வாய்க்கிழமை மானிப்பாய் கொமர்ஷல் வங்கிக்கும் மானிப் பாய் சந்தைக்கும் இடைப்பட்ட பகுதியில் க.சுரேந்திரன் ஆகிய எனது ஒரு தொகை பண மானது தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர் கள் தந்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். (த)குந்த சன்மானம் வழங்கப் படும். தொடர்பு: **077 1373 114**



## வேலையாட்கள் தேவை

தெல்லிப்பளையில் இயங்கும் எரிபொருள் நிரப்பு நிலை யத்தில் வேலை செய்ய பெண், ஆண் வேலையாட் கள் தேவை.

தொடர்பு: **076 6655 643**


## பொன்னாலையில்...

தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வீடு ஒன்றுக்குள் நுழைந்த இராணுவத் தினர் வீட் டில் இருந்தவர்களை மிரட்டி தேசிய அடையாள அட்டை என்பவற்றை வாங்கி பார்வையிட்டு அந்த வீட்டு இளைஞனை கைது செய்து செல்வதற்கு முயற்சித்தனர். இதன்போது வீட்டுக்காரர்கள் கூக்குரல் இட்டதனால் அயல் வீட்டில் இருந்தவர்கள் சம்பவ இடத்துக்கு வந்தனர். இதையடுத்து அயல் வீட்டுக்காரரை இராணுவத்தினர் கட்டை யால் தாக்கினர். இந்த நிலையில் பிரதேசத்துக்குப் பொறுப்பான பிரதேச சபை உறுப்பின ருக்கு தொலைபேசி மூலம் தகவல் வழங் கியதை அடுத்து அந்த இடத்திற்கு வந்த பிர தேச உறுப்பினர், 'மக்கள் மீது ஏன் தாக் குதல் நடத்தினீர் கள்'? என்று கேள்வி எழுப்பி னார். அதற்கு இரா ணுவத்தினர் நாங் கள் மக்கள் மீது தாக் குதல் நடத்தவில்லை. தற் பொழுது ஊர டங்கு நடைமுறை யில் உள்ளது என்று தெரிவித்தனர். (அன் றைய தினம் ஊர டங்கு நடைமுறை யில் இல்லை). பிர தேச சபை உறுப்பின ரும் இராணுவத்துடன் முரண்பாட் டில் ஈடுட்டு பொலிஸாருக்கு அழைப் பினை மேற்கொண் டார். இதன் பின்னர் இராணுவத்தினர் தப் பிச் சென்றுள்ளனர். பொலிஸில் சம்பவம் தொடர்பில் முறைப் பாடு பதிவுசெய்யப்பட் டுள்ளது. (ம-27)


## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கிவரும் புடைவை யகம் ஒன்றுக்கு அனுபவமுள்ள மற்றும் அனுபவமற்ற ஆண் வேலை யாட்கள் தேவை.

தொடர்பு: **077 736 2136**



## சமையலாளர்கள் தேவை

யாழ் நகரின் பிரபல்யமான ஹொட்டலான Tilko Jaffna City Hotel இற்கு சமையலாளர்கள் தேவை. அனுபவமுள்ளவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையை கீழ் உள்ள எமது முகவரிக்கு 24.08.2021 இற்கு முன்னர் தபாலில் கிடைக்கக் கூடியவாறு அனுப்பவும்.

முகவரி: **Tilko Jaffna City Hotel**
**No.70/06, K.K.S. Road, Jaffna.**
**T.P: 076 149 8963, 021 720 0707**


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

# VACANCIES

University of Jaffna will entertain applications to reach us on or before 31.08.2021 from qualified Sri Lankan Nationals for the undermentioned Temporary posts.

### FACULTY OF SCIENCE

**Temporary Assistant Lecturer / Temporary Demonstrator in**
Botany / Chemistry/ Physics / Zoology / Fisheries
**Temporary Assistant Lecturer /Temporary Instructor in**
Mathematics / Statistics / Computer Science
**Temporary Instructor in**
Computing
**Temporary Research Assistant in**
Chemistry / Zoology

**Minimum Requirements/Qualifications:**

1. A Degree with specialization in the relevant subject with First Class or Second Class (Upper Division) Honours;
   OR
2. A Degree with specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours;
   OR
3. (a) A Degree with specialization in the relevant subject without Honours or any other degree with at least Second Class Honours,
   **and**
   (b) a recognized postgraduate degree in the relevant subject

**Note:** Graduates or candidates who are awaiting the results of the final degree examinations may also apply for the post of Temporary Demonstrator/ Temporary Instructor.

### SALARY AND OTHER BENEFITS

| Post | Salary scale |
|---|---|
| Temp. Demonstrator/ Temp. Instructor | Rs. 40, 920/- p.m (Fixed) |
| Temporary Assistant Lecturer | Rs. 49,860/- p.m (Fixed) |
| Temporary Research Assistant | Rs. 49,860/- p.m (Fixed) |

In addition to the above salary, the allowances approved by University Grants Commission applicable to the posts will also be paid.

Application form and Payment Voucher are available at the Faculty of Science website www.sci.jfn.ac.lk. Applicants are requested to send the prescribed application form downloaded from the faculty website with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to any branch of the People's Bank in favour of University of Jaffna Collection Account Number: 970000090000387 of Bursar, University of Jaffna.

Perfected applications for the above posts shall be sent to the Assistant Registrar/- Faculty of Science, University of Jaffna, Sri Lanka under registered post with the photocopies of statement of the Degrees and Service certificates. In addition to the registered post, candidates are requested to fill the online form which is available at the Faculty of Science website.

Submission of Applications will not be entertained in person.

Those who wish to apply for more than one post should submit separate application for each.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview.

17.08.2021

**Registrar,**
**University of Jaffna,**
**Sri Lanka.**

## வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் மேற்பார்வையாளர் சேவைக்கு உள்வாரியாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் கோரல் - 2021 - திருத்தம்

2021.08.03 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பந்திகள் 3.4 மற்றும் 7.3 பின்வருமாறு மாற்றியமைக் கப்படுகின்றது.

3.4 03/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக PL-1-2016 சம்பளம் குறியீட்டில் சம்பளத் தைப் பெறுபவராக இருத்தல் வேண்டும்.

7.3 விண்ணப்பிக்கவேண்டிய இறுதித்திகதி 2021.08.24 ஆக நீடிக்கப்படுகிறது.

**திரு. கிருஸ்ணானந்தம் விஜயேஸ்வரன்**
**செயலாளர்,**
**வலிகாமம் மேற்குபிரதேச சபை,**
**சுழிபுரம்.** **2021.08.16**

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)

### Bill of Quantities

### Proposed Driveway improvement work at LFS - main street for Jaffna Multi Purpose Co-operative Society (Ltd)

| Item | Description | Qty | Unit | Rate | Amount |
|---|---|---|---|---|---|
| 1 | Cutting & Removing 75mm thick existing tar surface and dispose the debris as directed. | | $m^2$ | | |
| 2 | 1:2:4 ( 20mm) concrete floor ( 100 mm thick ) areas with 6 mm mild steel in 300mm spacing. Rate to include expantion joints at 3m crs. Both ways as per engineer's instruction and testing for concrete, Plant for mixing, handling , hosting , depositing, compacting, vibrating, Cecring, macking good after removed of form work and for keeping 8mm expantion joints with premix. | | | | |
| | Total | | | Rs. | |

**விண்ணப்ப முடிவுத்திகதி :- 2021.08.30**

**விண்ணப்பிக்கும் முறை :**

மேற்படி கூறுவிலைக்கான விண்ணப்ப படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரி யாலயத்தில் ரூபா. 10.00 இனை செலுத்திப் பெற்று, நேரில் அல்லது தபாலில் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், **"Proposed Driveway improvement work at LFS - Main Street "** எனக்குறிப்பிட்டு **"President, Jaffna Multi - Purpose Co- operative Society ( Ltd) No. 127, K.K.S Road, Jaffna** என்னும் முகவரிக்கு **2021.08.30** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டை....

நாட்டில் கொரோனா பரவல் தீவிரமடைந்து வரும் நிலையில் நாடு ஏன் முடக்கப்படவில்லை? என்ற கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக்கொள்வதும் கொரோனாத் தடுப்புக்கான வழியாகும். உலகின் பொருளாதார பலம் கொண்ட நாடுகளும் நாட்டை முடக்காமல்தொற்று நோய்க்கு முகங்கொடுத்து வருகின்றன.
'இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரே வழி அனைவருக்கும் தடுப்பூசி வழங்குவதாகும். நாட்டில் கொரோனாத் தடுப்புக்கு மேற்கொள்ள வேண்டிய அனைத்து விதமான நடவடிக்கைகளையும் அரசு முன்னெடுக்கவுள்ளது - என்றார். (ம-22)

## ஒரேயொரு....

தமர் ஜெசிந்தா அண்டர்சன் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். நியூசிலாந்தின் பெரும் நகரமும் வர்த்தக நகருமான ஆக்லாந்தில்தான் இந்தத் தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் டெல்டா திரிபால் பாதிக்கப்பட்ருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. இதனால் ஆக்லாந்து அடுத்த 7 நாள்களுக்கு முடக்கப்பட்டுள்ளது. ஒட்டு மொத்த நாடும் அடுத்த மூன்று தினங்களுக்கு முடக்கப்பட்டுள்ளது. (ம)

## உண்மையைச்...

புக்வெலவுக்கு அந்தப் பதவி வழங்கப்பட்டது. இவ்வாறு ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கொரோனா வைரஸ் தொற்று தற்காலிக ஏற்பாடுகள் சட்டவரைபு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
'கொரோனா வைரஸ் தொற்று பரவுவதற்கு நாட்டில் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களே காரணம் என்று அரசு கூறுகிறது. நிதி அமைச்சராக பஸில் ராஜபக்ச பதவியேற்கும்போது நாடு முழுவதிலும் சந்திக்கு சந்தி மக்கள் ஒன்றுகூடி அதனைக் கொண்டாடினார்கள். அதேபோல் நாவலபிட்டியிலும் ஆளுங்கட்சியினர் பேரணிகளை முன்னெடுத்தனர். அரசின் இத்தகைய செயற்பாடுகளால் நாட்டில் கொரோனா பரவவில்லையா? எனவே, கொரோனா வைரஸ் பரவலுக்கு போராட்டங்கள் காரணம் எனக் கூறவேண்டாம். கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்குத் தேவையான சரியான தீர்மானங்களை அரசு எடுக்க வேண்டும்.
நியூசிலாந்தில் ஒரேயொரு கொரோனா வைரஸ் தொற்றாளர் இனங்காணப்பட்டதற்காக அந்த நாட்டுப் பிரதமர் நாட்டை முடக்கியுள்ளார். ஆனால்.- இலங்கையில் அரசு அமைச்சரவையை மாற்றம் செய்துகொண்டிருக்கின்றது.
தனது அமைச்சு மாற்றத்தை பவித்ரா வன்னியாராச்சி அறிந்திருக்கவில்லை எனக் கூறுகின்றார். நாட்டின் சுகாதார நிலைமைகளின் உண்மைத்தன்மையைக் கூற முயற்சித்த பவித்ரா வன்னியாராச்சியை சுகாதார அமைச்சில் இருந்து விலக்கிவிட்டு, ஆசிரியர்களை "நாசமாய் போனவர்கள்" எனத் திட்டிய கெஹலிய ரம்புக்வெலவை சுகாதார அமைச்சராக நியமித்திருக்கின்றார்கள். நாமல் ராஜபக்சவுக்கு மேலதிகமாக ஓர் அமைச்சுப் பதவியை வழங்க வேண்டும் என்பதற்காகவே இந்த அமைச்சரவை மாற்றம் இடம்பெற்றது' என்றார். (ம-22)

## தடுப்பூசியால்...

தார ஒழுங்குவிதிகளை முறையாகப் பின்பற்றுவதையும் உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கொரோனா வைரஸ் தொற்று தற்காலிக ஏற்பாடுகள் சட்டவரைபு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆபத்தான கொரோனா வைரஸின் திரிபான டெல்டா நாட்டில் தீவிரமாகப் பரவி வருகின்றது. இந்த விடயத்தில் நாங்கள் ஒருவருக்கொருவர் குறை கூறிக்கொண்டிருக்காமல் அனைவரும் ஒன்றிணைந்து ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். இந்த வைரஸ் எமது நாட்டில் வேகமாகப் பரவி வருகின்றது.
இதை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பது தொடர்பாக நாங்கள் சிந்திக்க வேண்டும். இது தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். ஆனால், அரசு முன்னெடுக்கும் நடவடிக்கை போதுமானது இல்லை. கிராமிய மட்டத்தில் இது தொடர்பில் தெளிவுபடுத்தல்களை முன்னெடுக்க வேண்டும். அப்போதே மக்களிடையே இது தொடர்பில் தெளிவு ஏற்படும். எமது நாடு இப்போது சாதாரண நிலைமையில் இருக்கும் நாட்டைப் போன்றே இருக்கின்றது. இவ்வாறு இல்லாது தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தத் தேவையான சுகாதார ஒழுங்குவிதிகளை அனைவரும் தமது பாதுகாப்புக் கருதி பின்பற்ற வேண்டும்- என்றார். (ம-22)

## தேவையற்று...

ரமடைந்து வருகின்றது. பொதுமக்கள் எதிர்வரும் நாள்ளில் முடிந்தவரை வீட்டுக்குள் இருக்க வேண்டும். இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
'பொதுமக்கள் மிகவும் கவனமாகச் செயற்பட வேண்டும். தேவையில்லாமல் வீட்டை விட்டு வெளியேற வேண்டாம். இது மிகவும் கவனமாக இருக்க வேண்டிய நேரம். பணியிடங்களிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக, அத்தியாவசிய ஊழியர்களை மட்டுமே வரவழைக்க வேண்டும் என்று பொது நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது' என்றார். (ம-22)

## மயங்கி...

வர் மயங்கி வீழ்ந்து மரணமடைந்துள்ள நிலையில் கொரோனாத் தொற்றுப் பரிசோதனைக்காகச் சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. ஜே.சி.பி. வாகனத்தின் உதவியாளராகக் கடமையாற்றிய குறித்த நபர் ஓமந்தைப் பகுதியில் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயத்தில் முற்பகல் 10 மணியளவில் திடீரென மயங்கி கீழே வீழ்ந்த நிலையில் அங்கிருந்தவர்களின் உதவியுடன் ஓமந்தை மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போதிலும் அவர் முன்னரே இறந்துவிட்டார் என மருத்துவர்கள் உறுதி செய்துள்ளனர்.
தெற்கிலுப்பைக்குளம் பகுதியினை சேர்ந்த 54 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தவர். உயிரிழந்த நபரின் சடலத்திலிருந்து பி.சி.ஆர். பரிசோதனைக்குரிய மாதிரிகள் பெறப்பட்டுள்ளன. (ம-110,18)

## இலங்கையில்...

அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், 3 வகையான திரிபுகள் தொடர்பில் எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது' என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
'நாட்டில் இன்று 'டெல்டா' வைரஸ்தான் வேகமாக பரவிவருகின்றது என்பதை ஆய்வாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இதற்கு முன்னர் இருந்த திரிபுகளை விடவும் இது அசுர வேகத்தில் பரவுகின்றது. அதிகளவு நோய் அறிகுறிகளும் தென்படுகின்றன. வைரஸ் தொற்றுக்கு உள்ளாகின்றவர்களுள் அதிகளவானோருக்கு ஒட்சிசன் தேவைப்படும் நிலையும் ஏற்பட்டுள்ளது.
இந்த நிலையில் இலங்கையில் பரவும் டெல்டா திரிபை விடவும் மேலும் சில திரிபுகள் உருவாகியுள்ளன என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். மூன்று திரிபுகள் குறித்து எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. எஸ்.ஏ.222வி, எஸ்.ஏ.701.எஸ், எஸ்.ஏ.1078.எஸ் என்ற திரிபுகளே ஏற்பட்டுள்ளன. நாட்டில் தற்போது வைரஸ் தொற்று வேகமாக பரவிவருவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.
தடுப்பூசி திட்டத்தை துரிதப்படுத்துவ தன் மூலம் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதும், மரண எண்ணிக்கையை குறைப்பதுமே எமது பிரதான நோக்கமாக இருந்தது. எமது நாட்டு சனத்தொகையில் 54 வீதமானோருக்கு ஏதேனும் ஒரு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. 21 சதவீதமானோர் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர். டெல்டா திரிபு வேகமாக பரவுவது குறித்து ஜுலை 15ஆம் திகதியளவில்தான் எமக்கு அறிவிக்கப்பட்டது. அது தொடர்பில் நாம் எச்சரிக்கை விடுத்தோம். ஆனால் அந்த மாதத்தில்தான் நாட்டில் போராட்ட அலை உருவானது. மக்கள் வீதிக்கு இறக்கப்பட்டனர். போராட்டங்களில் ஈடுபட வேண்டாம் என நாம் கோரிக்கை விடுத்தோம். இதற்கு செவிமடுக்கவில்லை. பயணத்தடை விதிக்கமுற்பட்டபோது, போராட்டங்களை ஒடுக்கவே நடவடிக்கையென விமர்சிக்கப்பட்டது. அன்று இவ்வாறு செயற்பட்டவர்கள் இன்று எம்மை விமர்சிக்கின்றனர். அன்று பயணத்தடை விதிக்க முடியாமல் போனதற்கும் இவர்களே காரணம்' என்றார். (ம-44)

## ஆணொருவரின்...

தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். சடலமாக மீட்கப்பட்டவர் அந்தப் பகுதியைச் சேர்ந்தவரில்லை. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ம-26)

## கொரோனா...

தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.
இதன்படி நாட்டில் இதுவரையில் அடையாளம் காணப்பட்ட மொத்தக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 65 ஆயிரத்து 629ஆக எகிறியுள்ளது. இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 283 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 14 ஆயிரத்து 340ஆக அதிகரித்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

## கொவிட்...

களம் அறிவித்துள்ளது.
இதுவரை ஒரே நாளில் பதிவான அதிகூடிய கொரோனா காவுகளின் எண்ணிக்கையாகும். இதையடுத்து நாட்டில் பதிவான கொரோனாச் சாவுகளின் மொத்த எண்ணிக்கை 6 ஆயிரத்து 434ஆக அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் உயிரிழந்த 171 பேரில் 102 ஆண்களும், 69 பெண்களும் உள்ளடங்குகின்றனர். (ம-22)

## யாழ்ப்பாணத்தில்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த புத்தூர் கிழக்கைச் சேர்ந்த 62 வயதுடைய ஆண் ஒருவரும் கல்வியங்காடுப் பகுதியைச் சேர்ந்த 57 வயதுடைய ஆண் ஒருவரும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 74 வயதுடைய பெண்ணொருவரும் உயிரிழந்துள்ளனர். இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 186ஆக உயர்வடைந்துள்ளது. (ம-26)

## வர்த்தக...

ஒன்றுகூடுவதைத் தவிர்த்து பாதுகாப்புடன் இருக்குமாறு யாழ்ப்பாண வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். தற்போதைய கொவிட்19 நிலைமைகளை எவ்வாறு கையாளுவது என்பது தெடர்பில் கேட்ட போதே அவர் இதனை தெரிவித்தார்.
மேலும் அவர் தெரிவிக்கையில்,
நாட்டில் தற்போது கொரோனா மோசமாகப் பரவி வருகின்றது. இதனால் சாவுகளும் அதிகரித்துள்ளன. எனவே எம்மையும் சமூகத்தையும் பாதுகாக்க வேண்டியது எமது தலையாய கடமை. எனவே நகர வர்த்தகர்கள் உட்பட அனைத்து வர்ததகர்களும் தங்கள் வர்த்தக நிலையங்களில் அதிக அளவில் மக்கள் கூடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் உரிய சுகாதார விதிமுறைகளையும் இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
அத்துடன் உணவு விநியோகத்தில் ஈடுபடும் வர்த்தகர்கள் தங்கள் வாடிக்கையாளர்களைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பொருள்களை வீடுகளுக்கு எடுத்துச் சென்று விநியோகிக்கும் முறையை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இந்தப் பெருந்தொற்றில் இருந்து மீண்டுவர வர்த்தகர்களும் பொதுமக்களும் தம்மால் இயன்ற பங்களிப்பை முழுமையாக வழங்க வேண்டும்- என்றார். (ம)

## குடும்பத்...

தந்தை. சுப்பிரமணியம் கிருசாந்தன் (வயது30) என்பவரே உயிரிழந்தவர். வல்வெட்டித்துறை வல்வெட்டியில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12.30 மணிக்கு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் படுகாயமடைந்த அவர் உடனடியாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 29 . 12 . 1942



மறைவு 19 . 07 . 2021

### அமரர் சங்கரப்பிள்ளை வயிரவப்பிள்ளை

கொல்லங்கலட்டி - பன்னாலை

முன்னாள் சிரேஷ்ட இயந்திர தொழில்நுட்பவியலாளர் - முகாரி வாகனப்பிரிவு சீமெந்துக் கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறை

**திதிநிர்ணயம்**

*சீர் மேவும் பிலவம் சிறந்த ஆடி அமை பூர்வத்தில்*
*பார்மேவும் வாழ்வகன்றே பரன் நகுலேசன் பதமிணைந்தார்*
*ஊர்மேவும் கொல்லங்கலட்டி குலமுயர் சங்கரப்பிள்ளை*
*பேர்மேவும் மைந்தன் வயிரவப்பிள்ளை எனும் புகழோனே*

இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து ஆடி மாதம் (19.07.2021) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எம் தந்தை ச.வயிரவப்பிள்ளையின் மறைவுச்செய்தி அறிந்து இக்கட்டான காலச்சூழலில் நேரடியாகவும், தொலைபேசி மற்றும் சமூக ஊடகங்கள் மூலமாகவும் தொடர்பு கொண்டு எம்முடன் துயர்பகிர்ந்து கொண்டோருக்கும், இறுதிக்கிரியைகளிற்கான சகல ஒழுங்கு களையும் மேற்கொள்ள உதவி, ஒத்தாசைகள் வழங்கிய உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஊரவர்களிற்கும், நன்றிதெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் எங்கள் குடும்பத் தலைவர் நோயுற்றபோது சகல விதத்திலும் உதவிய வைத்தியர்கள் மற்றும் சுகாதாரத்துறை ஊழியர்களிற்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இல்லத்தில் இன்று (18.08.2021) புதன்கிழமை நடைபெறும்

ஓம் சாந்தி !

**திருமதி இ. வயிரவப்பிள்ளை**
**லகுமதி குமரன் குடும்பம்.**
**வயிரவப்பிள்ளை முகுந்தன்**
**பாலமதி ஸ்ரீபிருந்திரன் குடும்பம்.**

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்கள தொழில் நிலையத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திருமதி சிறிகௌரிதாசன் சுஜேந்தினி** அவர்களின் பாசமிகு தந்தையார்

### நீலன் முருகேசு

அவர்கள் 16.08.2021 திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நலன்புரிக் கழகம்**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 12 . 11 . 1943



உதிர்வு 29 . 08 . 2020

### திருமதி இரத்தினேஸ்வரி ஆனந்தன்

எங்கள் இதயத் தெய்வம்
எம்மை விட்டுப் பிரிந்து விண்ணுலகு சென்று
ஆண்டொன்று ஆனபோதும் ஆறவில்லை எம்துயரம்
தினந்தோறும் உங்கள் நினைவுகளுடனேயே வாழ்கின்றோம் தாயே!
எங்கள் அம்மாவே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எம் நெஞ்சங்களில் வீற்றிருந்து
எங்களைக் கண்போலக் காத்திடுங்கள்.

இணுவைக் கந்தனின் பாதங்களில் தஞ்சமடைந்த எங்கள் அன்னையின் ஆத்மா சாந்தியடையட்டும்.

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

மலர்வு 29 . 07 . 1947



உதிர்வு 17 . 08 . 2021

### திருமதி நாகரத்தினம் பொன்னம்பலம்

கைதடி கிழக்கு கைதடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் பொன்னம்பலம் நேற்று (17.08.2021) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், பொன்னம்பலம் (உசன்) அவர்களின் அன்பு மனைவியும், கனகரட்ணம் (கதிர்வேலன் அரிசி ஆலை, கதிர்வேலன் ஹாட்வெயார், கைதடி), விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அபிராமி, அனுசியா, ஐங்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு தாயாரும், ஜெயதரன் (சிறிமுருகன் ஸ்ரோர்ஸ்), சாந்தகுமார், சோபிகா ஆகியோரின் அன்பு மாமியாரும், புவஷாந், தெனஸ்ருஜா, ரிஷிகேசவன், கார்த்திகேயன், யதுஷியா, அஸ்வினி, அஸ்விகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்ற சத்திஸ்வரி, காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை, உசனைச் சேர்ந்த இராசரத்தினம், விசியலட்சுமி காலஞ்சென்ற தனலட்சுமி, விசயரத்தினம், அன்னலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2021) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் கைதடி கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு: 076 910 2614**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

மலர்வு 25 . 09 . 1936



உதிர்வு 16 . 08 . 2021

### திரு. நீலன் முருகேசு

பிள்ளையார் கோவிலடி அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.நீலன் முருகேசு நேற்றுமுன்தினம் (16.08.2021) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

நீள்துயில் கொண்ட திரு.நீலன் முருகேசு காலஞ்சென்றவர்களான நீலன் - சின்னம்மா தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான கந்தன் - சீதேவி தம்பதியினரின் அன்பு மருமகனும், சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், செல்லம்மா, சிவக்கொழுந்து, சண்முகம், ஆறுமுகம், மாசிலாமணி ஆகியோரின் மூத்த சகோதரனும், சிவப்பிரகாசம் (பதில் அதிபர் - கலைமகள் தமிழ் வித்தியாலயம் - கொழும்பு - 14), வசந்தராணி (ஆசிரியர் - அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை - வளலாய்) நகுலேஸ் வரி (நூலகர் - வலி கிழக்கு பிரதேசசபை உப அலுவலம் - அச்சுவேலி), சுஜேந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கச்சேரி - யாழ்ப்பாணம்), சுகந்தினி (போதனாசிரியர் அஞ்சல் பயிற்சிக் கல்லூரி - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுந்தரவதனி (சுகாதார அமைச்சு - கொழும்பு), தயாபரன் (பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் - வவுனியா வைத்தியசாலை), கோணேஸ்வரன் (அலுவலகப் பணியாளர் - யாழ். கல்வி வலயம்), ஸ்ரீ கௌரிதாசன் (இலங்கை போக்குவரத்து சபை கோண்டாவில்), தயானந்தன் (நீயணைப்பு உத்தியோகத்தர் - யாழ். மாநகரசபை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிரவீன், திசான், ஜனிஷா, ஷஜானி, கபிஸ், ஜஸ்விகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2021) புதன்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் மின் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**T.P.:077 620 5709**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவணங்க மாட்டோம் புதிய போருக்குத் தயார்!

## ஆப்கானிஸ்தானின் முதலாவது கொரில்லாப் படையணி குரல்



**காபூல், ஓக. 18**

**தலிபான்களிடம் சரணடையமாட்டேன். அவர்களுக்கு ஒருபோதும் தலைவணங்க மாட்டோம். இன்னொரு புதிய போருக்கு தயாராகவே இருக்கிறோம் என்று ஆப்கான் முன்னாள் துணை அதிபர் அம்ருல்லா சாலே தெரிவித்திருக்கிறார்.**

அவர் தனது கீச்சகத்தில் இது தொடர்பில் தெரிவித்ததாவது: நான் என்றும் எப்போதும் எந்தச் சூழ் நிலையிலும் தலிபான் தீவிரவாதிகளுக்குத் தலைவணங்கமாட்டேன். எனது தலைவர் அகமது ஷா மசூதின் மாண்புக்கும் எப்போதும் நான் துரோகம் இழைக்க மாட்டேன். என் வார்த்தைகளை நம்பிய லட்சக்கணக்கான மக்களுக்கு ஏமாற்றத்தை அளிக்க மாட்டேன். தலிபான்களுடன் ஒரே கூரையின் கீழ் ஒருமித்து வேலை செய்ய மாட்டேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக நேற்றுமுன்தினம் ஆப்கனின் வடகிழக்குப் பகுதியில் இந்து குஷ் மலைகளின் ஊடே உள்ள பாஞ்ஷிர் பகுதியில் தலிபான் எதிர்ப்புத் தலைவர் அகமது ஷா மசூத்துடன், முன்னாள் துணை அதிபர் அம்ருல்லா சாலே எடுத்துக் கொண்ட புகைப்படம் வெளியானது. இந்த நிலையில் நேற்று அவர் இத்தகைய கருத்தைப் பதிவு செய்துள்ளார். (ம)



## காபூலில் மின்சாரக் கார்களில் விளையாடும் தலிபான்கள்

### வைரலாகும் காணொலி

காபூல், ஓக. 18

காபூலில் உள்ள பொழுதுபோக்கு பூங்காவில் மின்சாரக் கார்களில் தலிபான்கள் விளையாடிய காட்சி வைரலாகி வருகின்றது.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலை மையமாக கொண்டு இயங்கும் பத்திரிகையாளர் ஹமித் ஷாலிசி தனது கீச்சகப் பக்கத்தில் காபூலில் உள்ள பொழுதுபோக்கு பூங்காவில், பொம்மை மின்சார கார்களில் தலிபான்கள் விளையாடும் காட்சியை பதிவிட்டுள்ளார்.

கடந்த இரு மாதங்களாக உச்சக்கட்டப் போரை நடத்திய தலிபான்கள் இவ்வாறு குழந்தைகளின் கார்களில் விளையாடுகின்றமை இணையத்தளத்தில் வைரலாகி வருகின்றது. (ம)

# ஆப்கான் அரச ஊழியர்களுக்கு தலிபான்கள் பொதுமன்னிப்பு!

## பணிக்குத் திரும்புமாறும் அழைப்பு

காபூல், ஓக. 18

ஆப்கானிஸ்தான் அரச ஊழியர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படுகின்றது என்று அறிவித்துள்ள தலிபான்கள், விரைவில் பணிக்குத் திரும்புமாறும் அவர்களைக் கோரியுள்ளனர்.

அமெரிக்க இராணுவம் ஆப்கானிஸ்தானில் இருந்து திரும்பப் பெறப்பட்ட பின்னர், ஆப்கானிஸ்தான் முழுவதும் தலிபான்களின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.

இதனால் தலிபான்களுக்கு எதிரான அஸ்ரப் கானியின் ஆட்சியில் அரச ஊழியர்களாகப் பணியாற்றியவர்கள் தலிபான்களால் துன்புறுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. தன்னார்வ அமைப்புக்கள் பலவும் அவர்களை நினைத்து கவலையுற்றிருந்தன. இந்த நிலையில், அரச ஊழியர்கள் அனைவருக்கும் பொதுமன்னிப்பை தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

அத்துடன் அரச ஊழியர்களை உடனடியாகப் பணிக்குத் திரும்புமாறும் தலிபான்கள் உத்தரவிட்டுள்ளனர். ஆனால், ஆப்கான் அரச படையில் பணியாற்றிய இராணுவத்தினர் குறித்து எந்த அறிவிப்பும் தலிபான்களால் விடுக்கப்படவில்லை. (ம)



# கோரைக்குளம் அரச காணியே விரைவில் அது சீரமைக்கப்படும்

## மன்னார் பிரதேச செயலர் தெரிவிப்பு

மன்னார், ஓக. 18

மன்னார் நகர்ப் பகுதியில் அமைந்துள்ள கோரைக்குளம் அரச காணியே என்று உறுதிப்படுத்தப்பட்டது. நில அளவைத் திணைக்களம் எல்லைகளை அளவீடு செய்து தந்தபின் குறித்த குளம் புனரமைப்பு செய்யப்படும் என்று மன்னார் பிரதேச செயலாளர் ம.பிரதீப் தெரிவித்தார்.

மன்னார் நகர்ப் பகுதியில் அமைந்துள்ள கோரைக்குளம் தனி நபர்கள் சிலரால் அடாத்தாக வேலியிடப்பட்டு வருவதாக பொதுமக்கள் தெரிவித்த முறைப்பாட்டுக்கு அமைவாக நேற்று மாலை 5 மணி அளவில் மன்னார் கமநல திணைக்கள உதவி ஆணையாளர், மன்னார் நகர சபை தவிசாளர் உட்பட குறித்த பகுதியில் வசிக்கும் பொதுமக்களும் இணைந்து குளத்தை பார்வையிட்ட பின் பிரதேச செயலாளர் இந்தக் கருத்தை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் நகரினுள் அரச காணிகளை பொதுமக்கள் சிலர் அடாத்தாக பிடித்து திருட்டு உறுதிகள் தயாரித்து அதனை வேறு சில பொதுமக்களுக்கு விற்பனை செய்கிறார்கள். அவ்வாறு வரும் காணிகளை எவரும் கொள்வனவு செய்ய வேண்டாம் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

குளங்களை சுய நோக்கத்துக்காக நிலங்களாக்கும்போது ஏற்கனவே வறண்ட பிரதேசமாகி, பல்வேறு சிரமங்களை அனுபவித்து கொண்டிருக்கும் மன்னார் நகர மக்கள் மேலும்மேலும் வெப்பத்தினால் பாதிக்கப்படக்கூடும். ஆகவே குறித்த கோரைக்குளம் பகுதியில் முன்பு அடாத்தாக நிலங்கள் பிடித்தவர் களை வெளியேற்றி அவர்களுக்கு வேறு இடத்தில் காணிகள் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த குளப்பகுதிகள் நில அளவை திணைக்களத்தினரால் எல்லை நிர்ணயம் செய்தபின் பொதுமக்களுக்கு ஏற்ற வகையில் சீரமைப்புச் செய்யப்படும். அதுவரையில் இந்தப் பகுதியில் எவரும் எந்தவொரு அபிவிருத்தி வேலைத் திட்டங்களும் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது - என்றார். (ம-213)



English Classes

Gr-1 to O/L (Personal)

Zoom மூலம் அல்லது வீடு வந்து கற்பிக்கப்படும்.

T.P: 077 3314 608

காணி விற்பனைக்கு

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் A9 பாதையில் இருந்து 1km அரசடி வீதியில் 3¼ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)

தொடர்பு 077 021 2345

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18. 08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.